மாகையால் குருபத்னியைப்போல் அவர்களைப்பூஜிக்கவேண்டியது. தன் வர்ணத்திலேயே விவாஹஞ்செய்யப்பட்ட தமயன் பார்யையை நாள்தோறும் வணங்கவேண்டியது. ஞாதி, சம்பந்தி இவர்களின் பத்னிகளை ஊருக்குப்போய்வந்தபோதுமாத்ரம் வணங்கவேண்டியது. பெரிய அத்தை, பெரிய தாய், சிறியதாய் இவர்களிடத்தில் தன் தாயைப்போல் மர்யாதையாயிருக்கவேண்டியது. தொண்ணூறுவயஸுக்கு மேற்பட்ட சூத்ரனை எல்லாரும் மர்யாதைசெய்யவேண்டியது. வாஹனங்களில் வருகிறவன், தொண்ணூறுவயதிற்கு மேலபட்டவன், நோயுள்ளவன், சுமையாளி, ஸ்த்ரீகள், அனுஷ்டானமுள்ள ப்ராஹ்மணர்கள், அரசன, விவாஹம் செய்துகொள்ளப்போகிற மணப்பிள்ளை இவர்களுக்கு மற்றவாகள் வழி விடவேண்டியது. மேற்சொன்னவர்கள் ஒன்றுகவந்தால், அரசனுக்கும ப்ராஹ்மணனுக்கும் வழிவிடவேண்டியது. அவ்விருவரும் கூடிவந்தால அரசனைக்காட்டிலும ப்ராஹ்மணனுக்கு வழிவிடவேண்டியது.—(மனுஸ்மிருதி. 2.)

ப்ராஹ்மணனைக குசலமாயென்றும், க்ஷத்ரியனை அனமயமாவென்றும் க்ஷேமம் விசாரிக்கவேண்டியது என்று ஸ்மிருதிகளில் சொல்லியிருக்க, ப்ரஹ்மதேவரைப்பார்த்து வாலமீகி அனமயமாவென்று விசாரித்தது ஸ்மிருதிவிரோதம்.—(திலகம.)

16. உட்காரச்சொன்னர்:—சகலலோகங்களுக்கும் ஹிதத்தையுண்டுபண்ணக்கூடிய காவ்யத்தை இவரால் செய்விக்கவேண்டும் என்ற எண்ணத்துடன்.

29-10 மஹர்ஷியே:—ரிஷியாயில்லாதவாகள் காவ்யத்தைச் செய்யமுடியாது என்றபடி காவ்ய நிர்மாணசக்தியையடைந்தவரே!

எனது எண்ணப்படியே:—"ஆனல சாந்தஸ்பாவமுள்ள எனக்கு இமமாதிரி வார்த்தைகள் முற்றிலும் தகாதவைகளல்லவா?" என்ற ஆக்ஷேபத்திற்கு இது ஸமாதானம். விஷ்ணுவின் அவதாரமாகிய ராமனுடைய எண்ணத்தைத் தன்னுடைய எண்ணமாகச் சொன்னதற்கு, "ப்ரஹ்மவிஷ்ணுருத்ரர்கள் மூன்று தேவர்களாயிருந்தாலும் ஒரே ரூபமே" என்ற ஹரிவம்சவாக்யமே ப்ரமாணம்.

ஆக்ஷேபம்:—இப்படிப்பட்ட எண்ணம் ப்ரஹ்மாவிற்கு ஏன் உண்டாகவேண்டும்?

ஸமாதானம்:—பிறருக்குப் பார்யையை விட்டுப்பிரியும்படி செய்யக்கூடிய கர்மமானது எவருக்கு அதேமாதிரியான துக்கத்தைச்

செய்யமுடியாதோ அப்படிப்பட்டவர்களுக்குக்கூட, ப்ராஹ்மணர்களுடைய சாபமானது அந்தத்துக்கத்தை உண்டுபண்ணுமென்று லோகத்தாருக்கு ப்ராஹ்மணர்களுடைய மஹிமையைத் தெரிவிப்பதற்கும்; அகண்டமான ராஜ்யம் தனக்குக்கிடைக்கும்படியிருந்தாலும் காமக்ரோதத்தை ஜயிப்பதே மேலானது, போகங்களை அனுபவிக்கவேண்டுமென்ற ஆசை மேலானதல்ல என்ற தர்மத்தைத் தன்னுடைய கடத்தையாற்காட்டுவதற்கும்; வால்மீகி செய்த பாபத்திற்கு ப்ராயச்சித்தரூபமாகத் தன்னுடைய கீர்த்தியை வர்ணிப்பதால் அந்த மஹர்ஷிக்குக் கீர்த்தியை விருத்திபண்ணுவதற்கும்; ராமாயணத்தைப்படிப்பதும் கேட்பதும் பகவானிடத்தில் செய்யப்பட்ட மஹாபாபத்தைப்போக்கக்கூடியதாயிருக்கும்பொழுது இதாஜனங்களுடைய ஸகலபாபத்தையும் போக்கடிப்பதற்கு ஸந்தேஹமென்னவென்பதை லோகத்தாருக்குத் தெரிவிப்பதற்கும் செய்த விஷயம்.—(திலகம்.)

13. ச்லோகமேதவிர :—இந்த வாக்யமானது உமக்குக் கீர்த்தியுண்டாகும்பொருட்டே உம்மால் செய்யப்பட்டது. என்னுடைய அனுக்ரஹத்தாலும் உம்முடைய ப்ரதிக்ஞையாலும் அப்படியேயாகும்.—(திலகம்.)

14. தர்மிஷ்டராயும் :—ராவணவதத்தைப்போல க்ரௌஞ்ச பக்ஷியினுடைய வதமும் லோகங்களுக்கு ஹிதத்தைச்செய்வதனாலும் உம்மைக்காப்பாற்றுவதனாலும் தர்மத்தையே பலமாக உடைத்தானது.—(திலகம்.)

இப்படி ஸாமான்யமாக ராமசரித்ரத்தைச்செய்யும்படி அனுக்ரஹித்து அதைச் சுருக்கிச்சொல்லுகிறார். "தர்மிஷ்டராயும்" என்றதால் தார்மிகத்வமும்; "ஸகல குணங்கள் பொருந்தியவராயும்" என்றதால் உதாரத்தன்மையும்; "ராமனுடைய" என்றதால் தேஜஸ்விதையும் ஔஜ்வல்யமும்; "தைர்யமுள்ளவராயும்" என்றதால் மஹாபாக்யமும்; "ப்ரவர்த்திக்கச் செய்கிறவராயும்" என்றதால் பண்டிதத்வம் முதலிய காவ்யநாயகனுக்கிருக்கவேண்டிய ஸகலநாயககுணங்களும் ராமனிடத்தில் பொருந்தியிருக்கின்றனவென்று காட்டப்படுகிறது.

30-1 : வர்ணிக்கவேண்டும் :—சாபம் வேடனைக்குறித்துச்செய்யப்பட்டாலும் பகவானிடத்தில் ஸம்பந்தப்பட்டபடியால் மனு முதலானவர்களால் சொல்லப்பட்ட ப்ராயச்சித்தங்களால் நிவர்த்திக்கப்படாது. யாரைக்குறித்து இக்கச்சாபம் செய்யப்பட்டதோ அவருடைய சரித்த்தை வர்ணிப்பதே ப்ராயச்சித்தம் என்று தெரிவித்தார்.—(திலகம்.)

5. நீர் செய்யும் :—விஷயங்களை நடந்தபடி பார்க்கும் சக்தியை முதலில் அநுக்ரஹித்து, இப்பொழுது பார்த்தவைகளை உண்மையாகச்சொல்லும் சக்தியை அநுக்ரஹிக்கிறார்.

8. பாபத்தைப் போக்கடிக்கிற :—காவ்யத்தைச்செய்வதின் ப்ரயோஜனத்தைத்தெரிவிக்கிறார்.

9. ச்லோகங்களால் :—ஹர்ஷசரிதம் முதலான வசனகாவ்யங்களையும், வசனம் ச்லோகம் கலந்த நாடகம் முதலான காவ்யங்களையும்போலல்ல என்று காட்டப்பட்டது.

12. வழங்கிவாட்டும் :—இதுவும் காவ்யநிர்மாணத்தின் ப்ரயோஜனம்.

14. ஸஞ்சரிக்கக்கடவீர் :—புருஷார்த்தங்களில் கீர்த்தி ஒன்றாகாததால் மோக்ஷமென்ற புருஷார்த்தத்தைத்தெரிவிக்கிறார்.—(கோ.)

நீர் விசேஷ கருணையுள்ளவராயிருந்தாலும் பரமாத்மாவினிடத்தில் கோபித்தபடியால், மிகவும் அதமமான கதியையடைய வேண்டியவர்; ஆனாலும், எல்லாவற்றிற்கும் மேலான நானிருக்கும் லோகத்தில் வஸித்துக்கொண்டு என்னுடன் முக்தியடைவீர்.

"என்னால் ஸிருஷ்டிக்கப்பட்ட மேலுங்கீழுமுள்ள ஸகல லோகங்களிலும் தடையில்லாமல் ஸஞ்சரித்துக்கொண்டிருந்து முடிவில் முக்தியடைவீர்" என்ற தீர்த்தீயவ்யாக்யானம் பொருந்தாது. "என்னால் ஸிருஷ்டிக்கப்பட்ட லோகங்களில்" என்று சொன்னபிறகு "மேலுங் கீழும்" என்று சொல்லக்காரணமில்லை.—(திலகம்.)

31-8 : இவ்விதமான :—இதர விருத்தங்களும் கலந்திருப்பதால் "பெரும்பாலும்" என்று அர்த்தஞ்செய்யவேண்டியது.—(கோ.)

'மாநிஷாத' என்றதைப்போன்ற கருணாரஸத்தை ப்ரதானமாயுடைய ச்லோகங்கள் ராமாயணத்தில் பெரும்பாலும் வழங்கும்; இதர ரஸங்கள் இடையிலேவரும்.—(திலகம்.)

11. விசாலபுத்தி :—கவிக்கு முக்யகுணமான நிபுணதை என்றது காட்டப்பட்டது.

12. கீர்த்திமானை :—"ராமனுக்குக் கீர்த்தியை உண்டென்னுகிற ;" மற்றவிதமான கீர்த்தியைக்காட்டிலும் காவ்யத்திற்கு நாயகனாயிருப்பதாலுண்டாகும் கீர்த்தியேமேலானது.

கம்பீரமான விருத்தம் :—உபஜாதி, வம்சஸ்தம், வஸந்ததிலகம்; முதலான விருத்தங்கள் அந்தந்த ரஸங்களுக்குத் தகுந்தவை

களாயிருப்பது அர்த்தம், (வாச்யம், லக்ஷ்யம், வ்யங்க்யம் முதலியவை) த்ராக்ஷாபாகமாயிருப்பது; பதங்கள் உத்தமமான சய்யை பொருந்தியிருப்பது; மனதை யிழுக்கக்கூடிய வைதர்பீரீதி அமைந்திருப்பது என்ற மேன்மையான லக்ஷணங்கள்.

32-1. ஸமாஸதோஷம்:—இவைகளை வ்யாகரணசாஸ்த்ரத்தில் கண்டுகொள்ளவேண்டியது.

4. ராவணவத ப்ரதானமானதும்:—"ராமர் வனத்திலிருந்து திரும்பிவரும்வரையில் நடந்த சரித்ரத்தைமாத்ரம் கேட்கவேண்டும். அதற்கே ஸகலபலங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. பாரதத்திற்கு ஹரிவம்சம் எப்படி ப்ரமாணமான பாகமில்லையோ அப்படியே ராமாயணத்திற்கு உத்தரகாண்டமும். ஆகையால் மேல்ஸர்க்கத்தில் "ராமன் வனத்தில் ஸஞ்சரிக்கும்பொழுது நடந்த விருத்தாந்தங்களை ஸமாதியில் ஞானதிருஷ்டியால் பார்த்தார் என்று சொல்லியிருக்கிறார்" என்று சிலர் அபிபராயப்படுகிறார்கள். "ராவணவதப்ரதானமானதும்" என்றபதத்தில் "உம்," என்ற சப்தத்தால் உத்தரகாண்டத்தில்வரும் சரித்ரங்களும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்று சிலர் அபிபராயப்படுகிறார்கள்.—(திலகம்.)

மஹர்ஷியால்:—ப்ரஹ்மாவினுடைய அனுக்ரஹத்தால் கிடைத்த ஸத்யமான வாக்கையுடைய ரிஷியால்.

5. ராமசரித்தை:—ஸகல புருஷார்த்தங்களையும் கொடுக்கக்கூடிய சரித்ரத்தை.

கேளுங்கள்:—இது குசலவர்கள், பாத்வாஜர் முதலிய சிஷ்யர்களைப்பார்த்துச சொன்னவார்த்தை.—(திலகம்.)

ஸர்க்கம் 3.

முன் ஸர்க்கத்தில், வால்மீகி மஹர்ஷி, தான் செய்யும் க்ரந்தத்தைப் பிறர் மிகவும் கொண்டாடவேண்டுமென்று, நடந்த விஷயங்களை நடந்தபடி பார்த்து உண்மையாக வர்ணிக்கக்கூடிய சக்தி தனக்குக்கிடைத்ததைச்சொன்னார். இந்த ஸர்க்கத்தில் அநேககாரணத்தால், தான் வர்ணிக்கப்போகிற விஷயமானது உத்தமமானது என்று காட்டுகிறார். க்ரந்தத்தின் விஷயமானது களங்கமில்லாத ஞானதிருஷ்டியால் பார்க்கப்பட்டும், லோகோத்தரமான நாயகனுடைய குணங்களால் அலங்கரிக்கப்பட்டுமிருந்தால் உத்தமமென்று சொல்லப்படும். முதலில் உத்தமமான ஞானத்தால் பார்க்கப்பட்டது என்றதைச்சொல்லவேண்டி, அதற்குக் காரணமாக ராமாயணவிஷயத்தைத்தேடின விதத்தைச்சொல்லுகிறார்.

கதானுக்ரமணிகை :—ராமாயணகதையிலுள்ள விஷயங்களின் அட்டவணை.

33–1. **தர்மசிந்தையுள்ள** :—ராமாயணவிஷயத்தைத் தெரிவதற்கு ஸாதனம் குறிப்பிடப்படுகிறது.

5. **ஆசமனம்** :—ப்ராஹ்மணன் ப்ராஹ்மதீர்த்தத்தாலாவது, காயதீர்த்தத்தாலாவது, தேவதீர்த்தத்தாலாவது ஆசமனம் செய்யவேண்டியது. பித்ருதீர்த்தத்தால் ஒருபொழுதும் செய்யக்கூடாது. பெருவிரலின் நடுபாகம் ப்ராஹ்மதீர்த்தம்; சுண்டுவிரலின் அடிபாகம் காயதீர்த்தம்; பெருவிரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் நடுபாகம் தேவதீர்த்தம். முதலில் ஜலத்தை மந்த்ரத்தோடு மூன்றுதரம் உட்கொண்டு, பின்பு ஜலத்தால் வாயை இரண்டுதடவையும், கண், காது, மூக்கு, தோள், மார்பு, தலை இவைகளை ஒரு தடவையும் துடைக்கவேண்டியது. இதுதான் ஆசமனம். சூடு, நுரையில்லாத ஜலத்தில ரஹஸ்யமாய்க் கிழக்கு அல்லது வடக்கு முகமாய் ஆசமனம் செய்யவேண்டியது.

ப்ராஹ்மணன் மார்புவரையில்போகும் ஜலத்தினாலும், க்ஷத்ரியன் கழுத்துவரையில்போகும் ஜலத்தினாலும், வைசயன் உண்ணுக்குவரையிலபோகும் ஜலத்தினாலும், சூத்ரன் நாவினுமுதட்டினும்படும் ஜலத்தினாலும் ஆசமனஞ்செய்தால் பரிசுத்தனாகிறான். —(மனுஸ்மிருதி 2.)

கிழக்குநுணியாய் :—பித்ருக்களைக்குறித்துச் செய்யுங்கர்மங்களில் தெற்கு நுணியாகவும், தேவதைகளைக்குறித்துச்செய்யுங்கர்மங்களில் கிழக்குநுணியாகவும் தர்ப்பங்களைப் போடவேண்டியது.

8. **யோகபலத்தால்** :—ஸகலப்ராணிகளுடைய எண்ணங்களும், வார்த்தைகளும், செய்கைகளும், அவை நடந்த அந்தக்ஷணமே மஹாகாசத்தில் அவைகளுக்குத்தகுந்த ரூபங்களுடன் விசித்ரவர்ணங்களுள்ள படங்களாகப் பதிந்துவிடும். எக்காலத்திலும் அழியாது. அவைகளுக்கு நம்முடைய புராணங்களில் சித்ரகுப்தனுடைய புஸ்தகமென்றும், அவைகளை அவர் எழுதிப்பாதுகாத்து வருகிறாரென்றும், ஒவ்வொரு ஜீவனுடைய ஆயுள்முடிந்து அவன் யமதர்மராஜாவுக்கெதிரில் கொண்டுபோகப்படுமபோது அந்த ஜந்துவின் கர்மக்கணக்கை அவர் படிக்கிறாரென்றும், அதன்ப்ரகாரமே யமன் அந்த ஜீவனுக்கு ஸுகதுக்கானுபவங்களை விதிக்கிறாரென்றும் சொல்லபபட்டிருக்கின்றது. பூலோகத்தில் வஸிப்பவர்களுக்கு அங்கேயிருக்கும் ஸ்தூலவிஷயங்களைப்பார்க்கக்கூடிய ஸ்தூலத்ருஷ்டிமாத்ரமேயுண்டு. புண்யலோகமுதலியை மேல்

லோகங்களில் நடக்கும் விஷயங்களைப்பார்க்கக்கூடிய ஸூக்ஷ்ம திருஷ்டி கிடைப்பது. அது ஒவ்வொரு ஜீவனுக்கும் யோகாப்யாஸத்தினுலாவது, அல்லது தேவதையின் அனுக்ரஹத்தினுலாவது கிடைக்கும். அது நமது பஞ்சேந்த்ரியங்களின் ஸ்வபாவமான சக்திகளை எல்லையில்லாமல் பெருக்குவதேயாம். ஸ்தூலவிஷயங்களைப் பார்ப்பதுபோல் இந்தலோகத்தில் மற்றவிடங்களிலும், இதரலோகங்களிலும் நடக்கும் விஷயங்களை ஞானக்கண்ணுல் பார்க்கக்கூடும்; அவ்விடத்தில் உண்டாகும் சப்தங்களை ஞானச்செவியால் கேட்கக்கூடுமே; மற்ற இந்த்ரியங்களுடைய விஷயமும் இப்படியே. அதாவது, மஹாகாசத்தில் படங்கள் ரூபமாய்ப்பதிந்திருப்பதைப் பஞ்சேந்த்ரியங்களுடைய சக்திகளும் ஒரேரூபமாயிருக்கும் ஞான சக்தியால் அறிவதே. பாரதயுத்தத்தில் நடந்த விஷயங்களை அறிந்துகொள்ள ஸஞ்ஜயனுக்கு வ்யாஸமஹர்ஷி அனுக்ரஹித்த சக்தி இதுவே. பகவான் தமது விசவரூபத்தை அர்ச்சுனனும் உத்தவரும் பார்க்கும்படி அவர்களுக்கு அனுக்ரஹித்த திவ்யதிருஷ்டியும் இதுவே.—(ஸ்வா.)

34-1. தர்மம், மோக்ஷம் :—புருஷார்த்தங்களில் தர்மத்தையும் அர்த்தத்தையும் விஸ்தாரமாயும், சர்மத்தைசுருக்கமாயும் வர்ணிக்கிறது; அதாவது அந்தப்புருஷார்த்தங்களைக்கொடுக்கிறது.

15. கதைகள் :—யோகவாஸிஷ்டத்தில் சொல்லியிருக்கும் ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கும் கதைகளும், ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கும் கங்கோத்பத்தி முதலிய கதைகளும்.

36-20. நடக்கப்போகிற :—ஸீதையைக் காட்டிற்கனுப்புவதற்குமுன் நடந்த விஷயங்கள் அதிகமென்றும, அதற்குப்பிறகு நடந்த விஷயங்கள் ஸ்வல்பமென்றும் தெரிகிறது.

ஸர்க்கம் ௩.

முன் ஸர்க்கத்தில் க்ரந்தத்தில சொல்லப்படும் விஷயம் ஸர்வோத்தமமென்று காட்டப்படுகிறது. இப்பொழுது, செய்யப்படும் க்ரந்தமானது ஸர்வோத்தமமென்று காட்டப்படுகிறது. க்ரந்தகர்த்தா, விஷயங்களை உண்மையாகப்பார்த்து வர்ணிப்பதில் ஒப்பற்றவர்; காவ்யமோ, எந்த மஹாபுருஷனுடைய குணங்களைக் கேட்பதனுல் ஸகலபாபங்களும் நீங்கி ஸகலக்ஷேமங்களும் கிடைக்குமோ அந்த மஹாத்மாவினுடைய சரித்ரம்; பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது; ஆசாரியர்களால் ச்லாகிக்கப்பட்டதென்
[illegible]

36-24. ராவணனைக்கொன்று :—" ஸகல லோகங்களையும் ரக்ஷிப்பதற்காக ரகுகுலத்தில் அவதரித்து அரசாண்டுவந்த" என்றதால் இந்தக்காவ்யத்திற்கு மேற்சொன்ன லக்ஷணங்களில் முதல் இரண்டும் பொருந்தியிருக்கின்றனவென்று காட்டப்பட்டது.

ராமன் :—" ஸமஸ்த கல்யாணகுணங்களால் ஸகலப்ராணிகளுடைய மனதைக் கவருகிறவர்" என்றதால் காவ்யமானது பெரியோர்களால விசேஷமாய்க் கொண்டாடப்படுவதற்கு நாயகனுடைய மஹிமை காரணமென்று காட்டப்பட்டிருக்கிறது.

28. பதச்சேர்க்கை :—ராமாயணகாவ்யத்திற்கு ஆத்மாவைப் போல் விளங்கும் வைதர்பீ என்ற ரீதியானது காட்டப்படுகிறது.

29. இந்த மஹாகாவ்யம் :—பிற்காலத்தில் க்ரந்தபாடம், ச்லோகங்களின் கணக்கு முதலியவை மாறாமலும் பிசகாமலுமிருக்கும்படிக்கும்; அதிகசுருக்கமில்லாமலும் அதிக விஸ்தாரமில்லாமலுமிருக்கும் ச்லோகங்களையும், ஸர்க்கங்களையும், காண்டங்களையுமுடையதால் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளத்தகுந்ததென்று காட்டுவதற்கும், கணக்கிடப்படுகிறது.

37-1. நிகரில்லாத :—இந்தக்காவ்யமானது பெரியோர்களால் கொண்டாடத்தகுந்ததென்று தெரிவிக்கிறார்.

10. நமஸ்கரித்தார்கள் :—ராமாயணத்தைத் தங்களுக்கு உபதேசம் செய்யவேண்டுமென்று.

11. தர்மத்தை :—குருசுச்ரூஷையின் தர்மத்தை.

12. தைர்யமுள்ளவர்கள் :—ஆரம்பித்தகார்யத்தைக் கைவிடாமல் நடத்தும் தைர்யமுள்ளவர்கள்.

21. உபதேசித்தார் :- ராமபட்டாபிஷேகத்திற்குப் பிற்காலத்தில் இந்தக்காவ்யம் வால்மீகியால் செய்யப்பட்டது; அதற்குப் பிறகு குசலவர்களுடைய உத்பத்தி; இதையறிந்தே ராமன் ஸீதையை வால்மீகி மஹர்ஷியின் ஆச்ரமத்தில் கொண்டுபோய் விடும்படி உத்திரவு செய்தார்.

19. ஸீதாசரிதம் :—பாரதத்தில மோக்ஷ உபாயலக்ஷணமும், ராமாயணத்தில் பகவானுக்குப் புருஷகாரமான மஹாலக்ஷ்மீயின் லக்ஷணமும் உபதேசிக்கப்படுகிறதென்று ஆசார்யர்களுடைய அபிப்ராயம். ராமாயணத்தில் ராமனுடைய மஹிமையே வர்ணிக்கப்பட்டிருந்தால் ராமன் அதை மிகவும் ஆதாவாய்க்கேட்டாரென்பது எப்படிப்பொருந்தும்? தன்னுடைய புகழைத்தானே கேட்பது தோஷமல்லவா? தீரோதாத்தநாயகனான ராமன் அப்படி

இருக்கலாமா? ஆகையால் ராமாயணம் ஸீதையின் மஹாத்ம்யத்தையே விசேஷமாய் வர்ணிக்கின்றது. ப்ரியமான நாயகியைவிட்டுப்பிரிந்த அவருக்கு அவளுடைய சரித்ரத்தையும் குணங்களையும் மஹிமையையும் கேட்பது இன்பமல்லவா? ஆகையால இந்தக் காவ்யத்திற்கு ஸீதாசரிதம் என்ற பெயர் தகும்.

பௌலஸ்யவதம் :—ஒவ்வொரு காவ்யத்திற்கும் பீஜம், பிந்து, பதாகா, ப்ரகரீ, கார்யம் என்ற ஐந்து லக்ஷணங்களுண்டு. மஹா விஷ்ணுவின் அவதாரமும் ஸீதாவிவாஹமும பீஜமாகும். தேவதைகள் ப்ரார்த்தித்த ராவணனுடைய வதமானது ராமனுடைய அபிஷேகத்தால் தடுக்கப்பட்டிருக்கும; அப்படியிலலாமல் ராமனைக்காட்டிற்கனுப்பும்படியாகக் கைகேயி செயத ஸாஹஸம் பிந்துவாகும். ராமனுடைய சரித்ரத்திற்கு ஏறக்குறைய ஒததிருக்கும் ஸுக்ரீவனுடைய சரித்ரம் பதாகாவென்று சொல்லப்படும். ராமாயணகதையில் ஸம்பந்தப்படும் விபீஷணனுடைய சரித்ரம் ப்ரகரீ என்று சொல்லப்படும். உத்தேசித்த ப்ரயோஜனமாகிய ராவணவதம் கார்யம் அலலது பலமென்று சொல்லப்படும். ஆகையால் ராமாயணகாவ்யம் ராவணவதத்தைப்பலமாகவும, ஸீதாசரித்ரத்தைப்ரதானமாகவும், ராமனுடைய சரித்ரத்தை அதற்கு அநுகுணமாகவும் வாணிக்கின்றது.

24. நவரஸங்கள்.

1. சிருங்காரம் :—ஸ்திரீபுருஷர்களுக்குப்பரஸ்பரம் ஏற்படும் ப்ரேமையின லக்ஷணத்தையும், அதனல் மனஸில் உண்டாகும் அவஸ்தைகளையும், மாறுதல்களையும், அவைகளின் கார்யமான வார்த்தைகளையும செய்கைகளையும் வர்ணிப்பது.

2. கருணை :—இரக்கத்தையுண்டாக்குமபடியான காரணங்கள் ஏற்படும்பொழுது நமது மனஸின் ஸ்திதியையும், வார்த்தைகளையும், செய்கைகளையும் வர்ணிப்பது.

3. அத்புதம் :—ஆச்சர்யத்தையுண்டாக்கக்கூடிய காரணங்கள் ஏற்படும்பொழுது நமது மனஸின் ஸ்திதியையும், வார்த்தைகளையும், செய்கைகளையும் வர்ணிப்பது.

4. பீபத்ஸம் :—வெறுப்பையுண்டாக்கும் காரணங்கள் ஏற்படும்பொழுது நமது மனஸின் ஸ்திதியையும், வார்த்தைகளையும், செய்கைகளையும் வர்ணிப்பது.

5. பயானகம் :—பயத்தையுண்டாக்கும் காரணங்கள் ஏற்படும்பொழுது நமது மனஸின் ஸ்திதியையும், வார்த்தைகளையும், செய்கைகளையும் வர்ணிப்பது.

6. **வீரம்** :—தைர்யத்தையும் ப்ராக்ரமத்தையும் சௌர்யத்தையும் உண்டாக்கும் காரணங்கள் ஏற்படும்பொழுது நமது மனஸின் ஸ்திதியையும், வார்த்தைகளையும், செய்கைகளையும் வர்ணிப்பது.

7. **ரௌத்ரம்** :—கோபத்தையுண்டாக்கும் காரணங்கள் ஏற்படும்பொழுது நமது மனஸின் ஸ்திதியையும், வார்த்தைகளையும், செய்கைகளையும் வர்ணிப்பது.

8. **ஹாஸ்யம்** :—சிரிப்பையுண்டாக்கும் காரணங்கள் ஏற்படும் பொழுது நமது மனஸின் ஸ்திதியையும், வார்த்தைகளையும், செய்கைகளையும் வர்ணிப்பது.

9. **சாந்தம்** :—காமக்ரோதங்களற்றுப் பொறுமையும் ஆறுதலும் நிறைந்து, எப்பொழுதும் ஸுகதுக்கங்களால் கலங்காமலிருக்கும் மனஸின் ஸ்திதியையும், அக்காலத்தில் நமது வார்த்தைகளையும் செய்கைகளையும் வர்ணிப்பது. இதற்கே வைராக்யமென்றும் பெயர்.

சாகுந்தலம், மாளவிகாக்னிமித்ரம், மாலதீமாதவம் முதலியவை ஸ்ருங்காரரஸத்தையும்; உத்தரராமசரிதம், விக்ரமோர்வசீயம் முதலியவை கருணாரஸத்தையும்; காவ்யநாடகங்களில் அதிசயோக்தி என்ற அலங்காரத்தை விளக்கும் ச்லோகங்களும் வர்ணனைகளும் அத்புதரஸத்தையும்; வைராக்யக்ரந்தங்களில் கர்ப்பவாஸம், தேஹத்தின் நிலையில்லாமை, மரணதுக்கம், யுத்தகளம், நரகயாதனை முதலியவைகளை வர்ணிக்கும் ச்லோகங்களும் வாக்யங்களும் பீபத்ஸரஸத்தையும்; ஸ்மசானம், யுத்தகளம், ராக்ஷஸர்கள், அஸுரர்கள், முதலிய விஷயங்களை வர்ணிக்கும் வாக்யங்கள் பயானகரஸத்தையும்; மஹாவீரசரிதம் முதலியவை வீரரஸத்தையும்; வேணிஸம்ஹாரம் முதலியவை ரௌத்ரரஸத்தையும்; ப்ரஹஸனங்கள், விதூஷகர்களுடைய வாக்யங்கள் முதலியவை ஹாஸ்யரஸத்தையும்; வைராக்யசதகம், பாகவதம், பகவத்கீதை முதலியவை சாந்தரஸத்தையும் விளக்கும். (ராமாயணம் நவரஸங்களமைந்த காவ்யமென்பதைப்பற்றி ராமாயணபீடிகையைப்பார்க்க.)

38-3. **பேசுங்காலத்தில்** :—பேசும்பொழுது அழைக்காட்டிலும் இனிமையான குரலுள்ளவர்கள் என்பது கருத்து.

8. **மஹர்ஷிகளுடைய** :—ராமாயணகாவ்யம் மஹான்களால் கொண்டாடப்பட்டதென்று காட்டுகிறார்.

33. **ஆதாரகாவ்யம்** :—வால்மீகிராமாயணத்தை ஆதாரமாய்க்கொண்டு பிற்காலத்துக்கவிகள் செய்த அனேக க்ரந்தங்களில் சில :—உத்தரராமசரிதம், மஹாவீரசரிதம், ப்ரஸன்னராக

வம், உன்மத்தராகவம், அனர்க்கராகவம், உதாராகவம், பாலராமாயணம், துதாங்கதநாடகம், மஹாநாடகம், ஜானகீபரிணயம், ஸங்க்ரஹராமாயணம், ஸேதுபந்தம், ரகுவம்சம், பட்டிகாவ்யம், ராகவபாண்டவீயம், ராமாயணசம்பூ, துளஸீதாஸராமாயணம், ஜைனராமாயணம் முதலியவை.

39-20. உத்திரவு செய்தார் :—ராமாயணகாவ்யமானது காவ்யநாயகனுன ராமசந்த்ரமூர்த்தியால் ஆதரவுடன் கேட்கப்பட்டதென்று காட்டுகிறுர்.

33. மிகுந்தமஹாத்மியமுள்ளது :—ராமன் இப்படிச்சொல்வது தோஷமல்ல. "ராமாயண காவ்யமும் உன்னுடைய சரித்ரத்தாலேயே உயிர்கொண்டிருக்கிறது" என்று ஸ்ரீகுணரத்னகோசத்தில் மஹாலக்ஷ்மியைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. "ஜனகமஹாராஜனுடைய புத்ரி எவனுடைய பார்யையோ அவனுடைய தேஜஸானது எல்லையில்லாதது" என்றதால் ஸீதையினுடைய மஹாத்ம்யம் ராமனுடையதைக்காட்டிலும் மேலானது.

லோகத்தில் தசரதர் ராமனை விச்வாமித்ரருடன் அனுப்பமாட்டேனென்றதற்கு அநேக காரணங்களில், ராமனுக்குப் பதினறு வயஸ் இன்னும் பூர்த்தியாகவில்லையென்பது ஒன்று. ஆனல் அப்பொழுது ராமனுக்குப் பன்னிரண்டு வயஸ்; அப்படியிருக்கக் கொஞ்சங்குறையப்பதினறுவயஸ் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? ராமனுக்குப் பதினறுகலைகள் பூர்த்தியாகவில்லையென்று கருத்து. குறைவாயிருந்த பதினறுவதுகலையாகிய சக்தியைம்மேளனத்தைப் பூர்த்திசெய்வதற்கே விசவாமித்ரர் ராமனை அழைத்துப்போய் ஸீதையை விவாஹம் செய்வித்தார்; பிறகு சக்தியினுடைய ஸம்பந்தமேற்பட்டுப் பதினறுகலைகள் நிறைந்த பூர்ணஸ்வரூபம் கிடைத்தது. அப்படிச சக்தியின் ஸம்பந்தத்தாலேயே ராமனுக்கு ராவணனைக் காசஞ்செய்யும் பராக்ரமம் ஏற்பட்டதென்று பூர்வாசார்யர்களுடைய ரஹஸ்யோபதேசம்.

ஆக்ஷேபம் :—தாடகை, ஸுபாஹு, மாரீசன், முதலியவர்களை ஜயித்தது எந்தச் சக்தியினுலே? அப்பொழுது ராமனுக்கு விவாஹம் ஆகவில்லையல்லவா?

ஸமாதானம் :—விச்வாமித்ரர் உபதேசித்த பலை, அதிபலை என்ற வித்யைகளின் மஹிமையால் தாடகையைக்கொன்றுர். பிறகு அந்த மஹர்ஷியினிடத்திலிருந்து பெற்ற பிருசாச்வபுத்ரர்களான அஸ்த்ரதேவதைகளைக்கொண்டு ஸுபாஹு முதலியவர்களை ஜயித்தார்.

ராவணனை வதம்செய்வதற்கு ராமனுக்கு ஸஹாயமாக ஸுக்ரீவன் ஹநுமான்முதலிய வானரச்ரேஷ்டர்களும் அவர்களுடைய

ஸைந்யங்களும் வேண்டியிருந்தன; அகஸ்த்யருடைய ஆச்ரமத்தில் அவரிடத்தில் தேவேந்த்ரனால் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட கத்தி, வில், அம்புகள், அஸ்த்ரங்கள் முதலியவைகளும் வேண்டியிருந்தன. விபீஷணனுடைய ஸஹாயமும் யுக்தியும் அவச்யமாயிருந்தன; இவ்வளவிருந்தும் போதாமல் முடிவில் அகஸ்த்யரால் ஆதித்யஹ்ருதயம் என்றவித்யை உபதேசிக்கப்பட்டு, இந்த்ரன் அனுப்பின திவ்யரதத்தில் ஏறிக்கொண்டு, மாதலியென்பவன் ஸாரத்யஞ்செய்ய, அநேகதினங்கள் ராப்பகலாய் ஓயாமல் சண்டைசெய்து, முடிவில் ப்ரஹ்மாஸ்த்ரத்தைப் ப்ரயோகித்து ராவணனைக் கொன்றார்.

“ராவணா! உன்னை நாசஞ்செய்யும்படி எனது பர்த்தா எனக்கு உத்தரவு கொடுக்கவில்லை. அப்படிச்செய்தால் எனது தபஸ் குறையும். எனது பர்த்தாவுக்கு உண்டாகவேண்டிய கீர்த்தியையும் கெடுப்பதாகவிருக்கும். எனக்குப் பதிவ்ரதை என்ற தர்மமும்போய்விடும். அப்படியில்லாவிட்டால் உன்னை இந்த க்ஷணத்திலேயே என்னுடைய கோபத்ருஷ்டியால் சாம்பலாக்கிவிடுவேன். நீ உன்னுடைய பராக்ரமத்தால் என்னை ராமனிடத்திலிருந்து அபஹரித்ததாக எண்ணுகிறாய். மூடா! அது ஒருபொழுதும் ஸாத்யமல்ல, உனக்கு நாசகாலம் ஸமீபித்துவிட்டபடியால், என்னைப் பலாத்காரம்செய்வது அதற்கு வெளிப்படையான காரணமென்று தெரிந்துகொள்” என்றும்;—(ஸுந்தரகாண்டம் 22-19.)

“பதிவ்ரதையான ஸீதை கோபங்கொண்டால் என்னசெய்ய முடியுமோ அதை நெருப்புக்கொழுந்தானது கைகளால் கட்டியணைக்கப்பட்டாலும் செய்ய முடியாது. ஆனால் ராவணன் அவளைக் கைகளால்தொட்டும் சாம்பலாகாமல் தனது தபோபலமஹிமையால் இன்னும் பிழைத்திருக்கிறான்” என்றும்;—(ஷை 59-4.)

ராவணன் ஸீதையை அநேகவிதமாய்ப்போதித்துத் தன்னைப்புருஷனாக அடையும்படி வேண்டும்பொழுது அவனுக்கு மறுமொழி சொல்ல உத்தேசிக்கையில், ஒருவேளை தன்னைமறந்து கோபங்கொண்டு அந்தக்கோபதிருஷ்டியால் அவனைப்பார்த்தால் அந்த க்ஷணமே சாம்பலாய்விடுவான்; அப்பொழுது ராமனுக்குக்கிடைக்கும் கீர்த்தியும் அழிந்து, பர்த்தாவுக்குமீறிநடந்தவள் என்று தனக்கு அபவாதமும் நேரும்; ஆகையால் ஒருவேளை கோபித்தாலும் அந்தத்திருஷ்டி ராவணனிடத்தில் தாக்காமலிருக்கும்படி தனக்கெதிரே ஒரு புல்லைப்போட்டுப் பேசினாளென்றும் சொல்லியிருப்பதால், (ஷை 21-2) ராவணனை வதம்செய்வது ஸீதைக்கு அலக்ஷ்யமான விஷயமென்று தெரிகிறது. ஸீதை ஸமீபத்திலிருக்கும்பொ

மூது, ராமன் கரதூஷணர்களையும் அவர்களுடைய ஸைன்யங்களையும் ஒண்டியாய் அதிசீக்ரத்தில் நாசஞ்செய்தார்; ஸீதை தன்னைவிட்டுப்பிரிந்தபிறகு அநேகராக்ஷஸர்களைக்கொல்வதற்குப் பிறருடைய ஸஹாயம் அவச்யமாயிருந்தது.

ஆ:—ராமாயணத்தில் ராமன் அநேக ஸமயங்களில் தன்னையண்டினவர்களைக்காப்பாற்றிச் சரணாகதிதர்மத்தை யுபதேசஞ்செய்திருக்கிறார். ஸீதையைப்பற்றி அப்படி யாதொன்றும் செய்யவில்லையே!

ஸ:—அவைகளைச்சற்றுப் பரீக்ஷித்துப்பார்ப்போம்.

ஆ:—தேவதைகள் ராவணனுடைய ஹிம்ஸை பொறுக்காமல் மஹாவிஷ்ணுவைச்சரணமடைய, அவர் பூமியில் அவதாரஞ்செய்து ராவணாதிகளை ஸம்ஹரித்து ஸகலலோகங்களுக்கும் க்ஷேமத்தைச் செய்தாரல்லவா?

ஸ:—இந்த ஒரு விஷயத்திற்காகமாத்ரம் அவதாரஞ்செய்திருந்தால் மேற்சொன்ன ஆக்ஷேபம் ஸரி. ஆனால் ராமாவதாரத்திற்குப் பிருகுமஹர்ஷியின சாபம், நாரதருடைய சாபம், விருந்தையின் சாபம் முதலிய அநேககாரணங்களுண்டு. ஆகையால் சரணாகதிக்கு இது வாஸ்தவ உதாஹரணமாகாது.

ஆ:—போகட்டும். பரதர் ராமனைச்சரணமடைந்து, ராஜ்யத்தையாளவேண்டுமென்று ப்ரார்த்தனை செய்தார்; ராமன் அதற்கிணங்கித் தான் வருமளவும் தலைக்குப்பதிலாகப்பாதுகைகளைக்கொடுத்து, ராவணவதமானபிறகு ராஜ்யத்தை ஒப்புக்கொண்டு சரணாகதியைப்பூர்த்திசெய்யவில்லையா?

ஸ:—கைகேயிக்குத் தசரதர் கொடுத்திருந்த வரங்களின்படி பரதருக்கு ராஜ்யங் கிடைக்கவேண்டியது. பிதிருவாக்யபரிபாலனத்திற்காக ராமன் அதை வேண்டாமென்றுசொன்னது பெரிய காரியமா? மேலும், பரதன் ராஜ்யத்தையாளவேண்டுமென்று கைகேயியின் எண்ணமேயல்லாமல், அவரிடத்தில ராஜ்யத்தை வாங்கிக்கொண்டு ராமன் ஆளவேண்டுமென்பது அவளுடைய ப்ரார்த்தனையல்ல. ஆகையால் இப்படிச்செய்வதினால் சரணாகதிதர்மம் என்ன ஏற்பட்டது?

மேலும், அயோத்யாகாண்டம் 34-ல் "எனக்கு ராஜ்யம்வேண்டாம். வனத்தில் ஸந்தோஷமாக ஸஞ்சரிப்பேன். எனக்கு ராஜ்யமாவது, ஸுகமாவது, இந்தப்பூமியாவது, போகமாவது, ஸ்வர்க்கமாவது, ப்ராணனாவது வேண்டாம்" என்று ராமர் சொல்லியிருக்கிறார். மேற்படி 53-ல், அவரே, "லக்ஷ்மணா! எந்த மனுஷ்

யன், மஹாமூடனுயிருந்தாலும், நமது பிதா செய்ததைப்போல், ஒரு ஸ்த்ரீயின் வார்த்தையைக்கேட்டுத் தன்னுடைய இஷ்டப் படி நடக்கும் என்னைப்போன்ற புத்ரனைத்தள்ளிவிடுவான்? கைகேயியின் புத்ரனுன பரதனும் அவனுடைய பார்யையும் கோஸல ராஜ்யத்தை ஏகசக்ராதிபதியாய் அனுபவித்துக்கொண்டு இப்பொழுதாவது ஸுகப்படுவார்களா? நான் கோபங்கொண்டால் இந்த லோகம் முழுவதையும் என்னுடைய பாணங்களால் நாசஞ்செய்ய முடியும். ஆனல், தர்மத்திற்கு விரோதமாய் நடந்தால் மஹாபாபம் நேரிடுமென்றும், பரலோகத்தில் நரகத்தில் தண்டிக்கப்படுவோமென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. அதற்குப்பயப் படுகிறேனேயொழிய, இல்லாவிட்டால் இந்தக்ஷணமே என்னுடைய பராக்ரமத்தால் தசரதனையும் பரதனையும் விலக்கிவிட்டு ராஜ்யத்தில் அபிஷேகஞ்செய்துகொள்ளமாட்டேனு?'' வென்று சொல்லியிருக்கிறுர். இது முன்னுக்குப்பின் விரோதமல்லவா? ராஜ்யத்தில் கொஞ்சமேனும் ஆசையில்லாதவருக்கு இப்படிச சொல்வது தகுமா?

மேலும், யுத்தகாண்டம் 128-ல், ராமன் ஹநுமானைப் பரதனிடம் தனது வரவைத்தெரிவிக்க அனுப்பும்போது, "நான் அயோத்யையைவிட்டுப்புறப்பட்டதுமுதல் இதுவரையில் நடந்த விருத்தாந்தங்களைப் பரதனிடத்தில்சொல். இதைக்கேட்கும்போது அவன் என்னிடத்தில் என்ன அபிப்ராயங்கொண்டிருக்கிறுன் என்பதை அவனுடைய முகஜாடையினுலும், அங்கசேஷ்டைகளினுலும், வார்த்தைகளாலும், இன்னும் அநேக அடையாளங்களாலும் நன்றுய்க்கவனித்துத் தெரிந்துகொள். பதினைன்குவர்ஷங்களாய் அகண்டமான ராஜ்யத்தையும் ஸகலபோகபோக்யங்களையும் தடையில்லாமல் ஒருவன் அனுபவித்துவந்தால், அதைத் திடீரென்று வேருெருவனுக்கு ஒப்பிவித்து அவனுக்குக்கீழ்ப்படிய மனம் வருமா?'' என்று சொல்லியிருக்கிறுர். பரதனுக்குத்தன்னிடத்திலிருக்கும் எல்லையற்ற பக்தியையும், ராமகைங்கர்யத்தைத்தவிர வேறு உபாயமும் பலமும் புருஷார்த்தமுமில்லையென்று உறுதியாயிருப்பதையும், மற்ற விஷயங்களில் அவருக்குள்ள பரமவைராக்யத்தையும், ராமன் நன்றுயறிந்திருந்தும் அவரிடத்தில் இப்படி ஸந்தேஹப்படுவது தகுமா? வேருெருஸமயத்தில் அவரே "என்னுடன் பிறந்தோர்களெல்லோரும் பரதனுக்கு ஸமமாவார்களா?'' என்று சொல்லவில்லையா?

ஆ:—இதிருக்கட்டும். ஸஹிக்கமுடியாத அபராதஞ்செய்த காகாஸுரனுடைய சரணுகதியை அங்கீகரித்து, 'அவனை மன்னித்து

அவனுக்கு ப்ராணதானம் செய்திருக்கிறார். அது சரணாகதிதர்மத்தை விளக்கவில்லையா?

ஸ:—காகாஸுரன் ஸீதைக்கு அபராதஞ்செய்தான். அவள் கோபிக்கவுமில்லை; அவனைத்தண்டிக்கவுமில்லை; தண்டிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கவுமில்லை. முடிவில், காகாஸுரன் ராமனுக்கெதிரேவந்து விழும்பொழுது, புத்திமயங்கி, ஸீதையின் காலடியில் தனது சிரஸையும் ராமனுடைய காலடியில் தனது [illegible]ங்களையும் வைத்துக்கொண்டு விழுந்தான். அப்பொழுது அவனைத் தூக்கியெடுத்து, அவனுடைய சிரஸை ராமனுடைய பாதங்களில் வைத்து, அவனைக்காப்பாற்றும்படி ராமனைப்ப்ரார்த்தித்தது ஜகன்மாதாவான ஸீதாப்பிராட்டியல்லவா? அப்படியிருக்க, தனக்கு யாதொரு அபராதமும்செய்யாத ராமனுக்குக் காகாஸுரனமேல் கோபமுண்டாயிற்று. அவனுடைய பலம் எவ்வளவு? அவன்மேல் அவர் ப்ரயோகித்த அஸ்த்ரத்தின் பலமெவ்வளவு? அவனை மூன்று லோகங்களிலும் துரத்தியடித்து, முடிவில வேறொருவரும் காப்பாற்றாமல் தன்னுடைய காலில்வந்து விழுந்தபிறகு, ஸீதை விசேஷமாய் ப்ரார்த்தித்ததின்மேல் மன்னித்தார். அப்பொழுதும் அவனுடைய கண்களில் ஒன்றைப்பலியாக வாங்கிக்கொண்டு அவனை விட்டார். இது என்ன சரணாகதி?

ஆ:—இதிருக்கட்டும. மஹாபுண்யங்களைச்செயதவர்கள் அடையும் உத்தமலோகங்களைக் கேவலம் ஒருபக்ஷிக்குக்கொடுக்கவில்லையா?

ஸ:—தன்னுடைய விஷயத்தில் உயிரைக்கொடுத்த ஜடாயுவிற்கு மோக்ஷத்தைக்கொடுத்தது, பதிலுக்குப்பதிலேதவிர ப்ரயோஜனத்தை அபேக்ஷிக்காமற்செய்த தர்மமா? இது ஒரு மஹிமையா?

ஆ:—தண்டகாரணயத்தில் வஸிக்கும் ரிஷிகள் ராக்ஷஸர்களுடைய உபத்ரவத்திலிருந்து தங்களைக்காப்பாற்றவேண்டுமென்று ராமனைச்சரணமடைந்தபொழுது, ராமன் "அப்படியே செய்கிறேன்" என்று ப்ரதிக்ஞைபண்ணி அதை நிறைவேற்றவில்லையா?

ஸ:—தேவதைகளுடைய சரணாகதி எந்தக்காரணங்களால் பலமிலலாதது என்று ஏற்பட்டதோ அதேகாரணங்கள் இதற்கும் பொருந்தும்.

ஆ:—ஸுக்ரீவமஹாராஜாவிற்கு விசேஷ உபத்ரவத்தைச்செய்துவந்த வாலியைக்கொன்று, ஸுக்ரீவனுடைய பார்யையை அவனுக்குத்திரும்பவும்கொடுத்து, அவனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்துவைத்தது சரணாகதிதர்மத்தைக்காட்டவில்லையா?

ஸ:—ஸுக்ரீவனுடைய பார்யையை ராமன் அவனுக்குக் கொடுத்தார். அதற்குப்பதிலாக அவன் ராமனுடைய பார்யையிருக்குமிடத்தைத் தேடிக்கண்டுபிடித்து, அவளை மீட்டுவருவதற்குத் தானும் தனது ஸைன்யங்களும் உயிரை லக்ஷ்யம் செய்யாமல் எவ்வளவோ கஷ்டப்பட்டார்கள். இதென்ன சரணாகதி? கேவல வ்யாபாரமல்லவா?

மேலும், தனக்கு யாதொரு அபராதம் செய்யாத வாலியை அதற்காக மறைந்திருந்து கபடமாய் அந்யாயமாய்க்கொன்றதின் தர்மம் தெரிந்தேயிருக்கிறது. அதனால் கிருஷ்ணாவதாரத்தில் வாலி அவருக்கு ஸஹோதரனாய்ப்பிறந்து, அவரைக்கொல்லவில்லையா?

மேலும், ஸுக்ரீவனுடைய பார்யை ருமையை வாலி அபஹரித்தானென்று அவன்மேல் குற்றஞ்சாட்டி, அவனை ராமன் கொன்றார். பிறகு வாலியினுடைய பார்யை தாரையை ஸுக்ரீவன் அபஹரித்துக்கொண்டபொழுது ராமனுக்கு அது தோஷமாகத்தோன்றவில்லையே!

ஆ:—இருக்கட்டும். விபீஷணன் செய்த சரணாகதி லோகப்ரஸித்தமல்லவா? அவனுக்கு விரோதியான ராவணனை வதம்செய்து லங்காராஜ்யத்தை அவனுக்குக்கொடுக்கவில்லையா?

ஸ:—விபீஷணன், தனது உடன்பிறந்தானும் அரசனுமான ராவணன் ஸௌக்யமாயிருக்கும்பொழுதெல்லாம் அவனுடன் ராஜ்யஸுகங்களையனுபவித்தான்; ஆபத்காலத்தில் ராவணனுக்கு த்ரோஹஞ்செய்து, அவனை விட்டு விலகினான்; அவனுடைய மர்மங்களையெல்லாம் அவனுடைய சத்ருவிற்குப்போதித்து, அவனுடைய மரணத்திற்குக்காரணமானான்; அவன் இறந்த பிறகும், "இவன் தர்மத்தைவிட்டு விலகினவன்; மஹாக்ரூரன்; கொஞ்சமேனும் தயையில்லாதவன்; பொய் சொல்லுகிறவன்; பரஸ்திரீகளை பலவந்தஞ் செய்கிறவன்; ஸகலலோகங்களையும் ஹிம்ஸை செய்கிறவன்; எனக்குத்தமயனென்று பெயரேயொழிய வாஸ்தவமாய் இவன் எனக்குப்பரமசத்ரு; தமயனென்றதால் பூஜிக்கத்தகுந்தவனானாலும் இவனுடைய நடத்தையைப்பார்க்குமிடத்தில் நான் இவனைப்பூஜிக்கவேண்டியதில்லை; என்னை ஜனங்கள் இரக்கமில்லாதவனென்று சொல்லட்டும்" என்ற க்ரூர வார்த்தைகளைச் சொன்னான். அந்த விபீஷணனை ராமன் ஆதரித்தது என்ன தர்மம்? அப்படித் தனது ஸஹோதரர்கள் செய்திருந்தால் பொறுப்பாரா?

விபீஷணனுடன் பிறந்த கும்பகர்ணன், ராவணனுடைய நடத்தைகெட்டதென்று தெரிந்து, அவனுக்கு எவ்வளவோ ஹிதத்தை

உபதேசித்தான். அவன் கேட்காமலிருந்தும், அவனுடன் பிறந்த காரணத்தாலும், அவனால் வளர்க்கப்பட்டு அவனுடைய அன்னத்தைப்புஜித்து அவனால் விசேஷ கீர்த்தியையும் பெருமையையும் ஸௌக்யத்தையுமனுபவித்தோமென்ற காரணத்தாலும், அவனுக்காக யுத்தஞ்செய்து, உயிரையிழந்து, நல்லகதியையடையவில்லையா? மேலும், பீஷ்மர், த்ரோணர், கிருபர், கர்ணன் முதலியவர்கள், திருதராஷ்டிரனும் அவனுடைய புத்ரர்களும் செய்தது அக்ரமமென்று அறிந்திருந்தும், அவர்களுடைய அன்னத்தைப்புஜித்தோமென்ற காரணத்தால் அவர்களுக்காக யுத்தஞ்செய்து உயிரையிழக்கவில்லையா? அப்படியிருக்க, விபீஷணனைக் காப்பாற்றினதும் ஸுக்ரீவனைக்காப்பாற்றினதும் தன் உடன்பிறந்தானுக்கும் அரசனுக்கும் த்ரோஹம் செய்தவர்களைக்காப்பாற்றினதே. தனக்கு விபீஷணன் செய்த உபகாரத்திற்குப்பதிலாகத்தான் அவனுக்கு உபகாரம்செய்தால் அது என்ன சரணாகதி?

மேலும், "என்னை மித்ரனென்றுவந்து அடைந்தவனை நான் ஒருபொழுதும் கைவிடமாட்டேன். அவனிடத்தில் தோஷங்கள் எவ்வளவிருந்தாலும் ஸாதுக்கள் அவைகளைத்தோஷங்களாக எண்ணமாட்டார்கள். 'நான் உன்னைச்சேர்ந்தவன்' என்று ஒரேதடவை என்னை வந்து ஒருவன் அடுத்தாலும் அவனுக்கு ஸகல ப்ராணிகளிடத்திலிருந்தும் பயமில்லாமற்செய்கிறேன். இது என்னுடைய வ்ரதம்" என்று ராமன் சொன்ன வார்த்தைகள், அவர் செய்திருக்கும் சரணாகதரக்ஷணத்திற்கு லக்ஷணமாகச்சொல்லப்படுகின்றன. அவைகளைச் சற்றுப் பரீக்ஷிப்போம். ஒருவனுக்குத்தன்னால் நிவர்த்திக்கமுடியாத கஷ்டங்களாவது ஆபத்துகளாவது ஸம்பவித்தால், கருணையுள்ளவனையும் அவைகளைப்போக்கக்கூடிய விசேஷசக்தியுள்ளவனையுமிருப்பவனை அவன் அண்டி, "நான் இவ்விதமான ஆபத்துகளால் பீடிக்கப்படுகிறேன். அவைகளை விலக்க எனக்குச்சக்தியில்லை. தங்களைத்தவிர எனக்கு வேறு கதியில்லை. தங்களையே சரணமாக அடைந்திருக்கிறேன், என்னைக்காப்பாற்றவேண்டும்" என்று ப்ரார்த்திக்கிறான். அப்பொழுது அந்த மஹாபுருஷன், தன்னை வந்து ஆச்ரயித்த அந்தத்தீனனிடத்தில் அளவற்ற இரக்கங்கொண்டு, "பயப்படாதே! உன்னைப்பீடிக்கும் ஸகல உபத்ரவங்களிலிருந்தும் உன்னை விடுவிக்கிறேன்" என்று ப்ரதிக்ஞைசெய்து, அவனிடத்தில் யாதொரு ப்ரதிப்ரயோஜனத்தையும் அபேக்ஷிக்காமல், தனது ஐச்வர்யம், பந்துக்கள், மித்ரர்கள், பரிவாரங்கள், கீர்த்தி, தேஹம், உயிர், பரலோகஸாதனமான புண்யம் முதலியவைகளையிழக்கவேண்டியிருந்தாலும் லக்ஷ்யஞ்செய்யாமல், அவனைக

ஸ:—ஸுக்ரீவனுடைய பார்யையை ராமன் அவனுக்குக் கொடுத்தார். அதற்குப்பதிலாக அவன் ராமனுடைய பார்யையிருக்குமிடத்தைத் தேடிக்கண்டுபிடித்து, அவளை மீட்டுவருவதற்குத் தானும் தனது ஸைன்யங்களும் உயிரை லக்ஷ்யம் செய்யாமல் எவ்வளவோ கஷ்டப்பட்டார்கள். இதென்ன சரணாகதி? கேவல வ்யாபாரமல்லவா?

மேலும், தனக்கு யாதொரு அபராதம்செய்யாத வாலியை அதற்காக மறைந்திருந்து கபடமாய் அந்யாயமாய்க்கொன்றதின் தர்மம் தெரியாமலிருக்கிறது. அதனால் கிருஷ்ணாவதாரத்தில் வாலி அவருக்கு ஸஹோதரனாய்ப்பிறந்து, அவரைக்கொல்லவில்லையா?

மேலும், ஸுக்ரீவனுடைய பார்யை ருமையை வாலி அபஹரித்தானென்று அவன்மேல் குற்றஞ்சாட்டி, அவனை ராமன் கொன்றார். பிறகு வாலியினுடைய பார்யை தாரையை ஸுக்ரீவன் அபஹரித்துக்கொண்டபொழுது ராமனுக்கு அது தோஷமாகத்தோன்றவில்லையே!

ஆ:—இருக்கட்டும். விபீஷணன் செய்த சரணாகதி லோகப்ரஸித்தமல்லவா? அவனுக்கு விரோதியான ராவணனை வதம்செய்து லங்காராஜ்யத்தை அவனுக்குக்கொடுக்கவில்லையா?

ஸ:—விபீஷணன், தனது உடன்பிறந்தானும் அரசனுமான ராவணன் ஸௌக்யமாயிருக்கும்பொழுதெல்லாம் அவனுடன் ராஜ்யஸுகங்களையனுபவித்தான்; ஆபத்காலத்தில் ராவணனுக்கு த்ரோஹஞ்செய்து, அவனை விட்டு விலகினான்; அவனுடைய மர்மங்களையெல்லாம் அவனுடைய சத்ருவிற்குபபோதித்து, அவனுடைய மரணத்திற்குக்காரணமானான்; அவன் இறந்த பிறகும், "இவன் தர்மத்தைவிட்டு விலகினவன்; மஹாக்ரூரன்; கொஞ்சமேனும் தயையில்லாதவன்; பொய் சொல்லுகிறவன்; பரஸ்த்ரீகளை பலவந்தஞ் செய்கிறவன்; ஸகலலோகங்களையும் ஹிம்ஸை செய்கிறவன்; எனக்குத்தமையனென்று பெயரேயொழிய வாஸ்தவமாய் இவன் எனக்குப்பரமசத்ரு; தமயனென்றதால் பூஜிக்கத்தகுந்தவனானாலும் இவனுடைய நடத்தையைப்பார்க்குமிடத்தில் நான் இவனைப்பூஜிக்கவேண்டியதில்லை; என்னை ஜனங்கள் இரக்கமில்லாதவனென்று சொல்லட்டும்" என்ற க்ரூர வார்த்தைகளைச் சொன்னான். அந்த விபீஷணனை ராமன் ஆதரித்தது என்ன தர்மம்? அப்படித் தனது ஸஹோதரர்கள் செய்திருந்தால் பொறுப்பாரா?

விபீஷணனுடன் பிறந்த கும்பகர்ணன், ராவணனுடைய நடத்தைகெட்டதென்று தெரிந்து, அவனுக்கு எவ்வளவோ ஹிதத்தை

உபதேசித்தான். அவன் கேட்காமலிருந்தும், அவனுடன் பிறந்த காரணத்தாலும், அவனால் வளர்க்கப்பட்டு அவனுடைய அன்னத்தைப்புஜித்து அவனால் விசேஷ கீர்த்தியையும் பெருமையையும் ஸௌக்யத்தையுமனுபவித்தோமென்ற காரணத்தாலும், அவனுக்காக யுத்தஞ்செய்து, உயிரையிழந்து, நல்லகதியையடையவில்லையா? மேலும், பீஷ்மர், த்ரோணர், க்ருபர், கர்ணன் முதலியவர்கள், த்ருதராஷ்டிரனும் அவனுடைய புத்ரர்களும் செய்தது அக்ரமமென்று அறிந்திருந்தும், அவர்களுடைய அன்னத்தைப்புஜித்தோமென்ற காரணத்தால் அவர்களுக்காக யுத்தஞ்செய்து உயிரையிழக்கவில்லையா? அப்படியிருக்க, விபீஷணனைக் காப்பாற்றினதும் ஸுக்ரீவனைக்காப்பாற்றினதும் தன் உடன்பிறந்தானுக்கும் அரசனுக்கும் த்ரோஹம் செய்தவர்களைக்காப்பாற்றினதே. தனக்கு விபீஷணன் செய்த உபகாரத்திற்குப்பதிலாகத்தான் அவனுக்கு உபகாரம்செய்தால் அது என்ன சரணாகதி?

மேலும், "என்னை மித்ரனென்றுவந்து அடைந்தவனை நான் ஒருபொழுதும் கைவிடமாட்டேன். அவனிடத்தில் தோஷங்கள் எவ்வளவிருந்தாலும் ஸாதுக்கள் அவைகளைத்தோஷங்களாக எண்ணமாட்டார்கள். 'நான் உன்னைச்சேர்ந்தவன்' என்று ஒரேதடவை என்னை வந்து ஒருவன் அடுத்தாலும் அவனுக்கு ஸகல ப்ராணிகளிடத்திலிருந்தும் பயமில்லாமற்செய்கிறேன். இது என்னுடைய வ்ரதம்" என்று ராமன் சொன்ன வார்த்தைகள், அவர் செய்திருக்கும் சரணாகதரக்ஷணத்திற்கு லக்ஷணமாகச்சொல்லப்படுகின்றன. அவைகளைச் சற்றுப் பரீக்ஷிப்போம். ஒருவனுக்குத்தன்னால் நிவர்த்திக்கமுடியாத கஷ்டங்களாவது ஆபத்துகளாவது ஸம்பவித்தால், கருணையுள்ளவனையும் அவைகளைப்போக்கக்கூடிய விசேஷசக்தியுள்ளவனையுமிருப்பவனை அவன் அண்டி, "நான் இவ்விதமான ஆபத்துகளால் பீடிக்கப்படுகிறேன். அவைகளை விலக்க எனக்குச்சக்தியில்லை. தங்களைத்தவிர எனக்கு வேறு கதியில்லை. தங்களையே சரணமாக அடைந்திருக்கிறேன், என்னைக்காப்பாற்றவேண்டும்" என்று ப்ரார்த்திக்கிறான். அப்பொழுது அந்த மஹாபுருஷன், தன்னை வந்து ஆச்ரயித்த அநாதனிடத்தில் அளவற்ற இரக்கங்கொண்டு, "பயப்படாதே! உன்னைப்பீடிக்கும் ஸகல உபத்ரவங்களிலிருந்தும உன்னை விடுவிக்கிறேன்" என்று ப்ரதிக்ஞைசெய்து, அவனிடத்தில் யாதொரு ப்ரதிப்ரயோஜனத்தையும் அபேக்ஷிக்காமல், தனது ஐச்வர்யம், பந்துக்கள், மித்ரர்கள், பரிவாரங்கள், கீர்த்தி, தேஹம், உயிர், பரலோகஸாதனமான புண்யம் முதலியவைகளையிழக்கவேண்டியிருந்தாலும் லக்ஷ்யஞ்செய்யாமல், அவனைக்

காப்பாற்றுகிறான். இதற்குச் சரணாகதரக்ஷணமென்றும், அபயப்ரதானமென்றும் பெயர்.

அதுவரையிலும் தனக்கு உபகாரம் செய்யாமலும், பிற்காலத்தில் அவனால் ப்ரதிப்ரயோஜனத்தையடைவதற்கு ந்யாயமில்லாமலுமிருப்பவனே ஸாத்விகதானத்திற்கு எப்படித் தகுந்தபாத்ரமோ அபயதானத்திற்குமப்படியே.

மேலும், நாம் ஒருவனைச்சிக்ஷிக்க யத்னிக்கும்பொழுது அவன் "என்னைக் காப்பாற்று" என்று ப்ரார்த்தித்தால், அவனை மன்னிப்பது அபயப்ரதானமாகாது. ஏனென்றால் நமக்குப் பிறர் செய்த அபகாரத்தை மன்னிப்பது நம்முடைய ஸ்வதர்மம. அப்படியிருக்க, எவரிடத்திலிருந்து உண்டான பயத்தை விலக்கி;அவனைக் காப்பாற்றுவதாய் நாம் ப்ரதிக்ஞை செய்யமுடியும்?

மேலும், நம்மைச்சரணமாக அடைந்தவன் பிறர்களைப்போய் ப்ரார்த்தித்து அவர்கள் மாட்டோமென்று மறுத்தபிறகு, நாம் அவனைக்காப்பாற்றுவதாய் ப்ரதிக்ஞைசெய்வது பெருந்தன்மையலல. ஒருக்ராமத்தில் அதிதிகளுக்கு அன்னமபோடக்கூடியவர்கள் வேறொருவருமில்லாமலிருக்கையில், அன்னம்போடச்சக்தியுள்ளவன் அதிதிபூஜைசெய்வது ஆச்சாயமா? அன்னம்போடக்கூடியவர்கள் அநேகர்களிருக்கையில் தான் அவர்களுக்கு முந்திக்கொண்டு அதிதிகளுக்கு அன்னம்போடுவதல்லவோ அதிதிபூஜையாகும்.

மேலும், நஷ்டப்படுகிறவன் நம்மை வந்தடைந்து, தனது வெட்கத்தையும் மானத்தையும் துறந்து, "எனக்குச்சக்தியில்லை, என்னைக்காப்பாற்றவேண்டும்" என்று ப்ரார்த்திததபிறகு அவனைக் காப்பாற்றுவது விசேஷமா? அல்லது, கஷ்டப்படுகிறவன் நம்மை ஆச்ரயித்து ப்ரார்த்திக்காமலிருந்தாலும, அவனுடைய துக்கத்தைத்தெரிவிக்காமலிருந்தாலும், அவனுடைய துக்கத்தையறிந்து; அவனிருக்குமிடத்தைத் தேடிப்போய், அவனெதிர்பாராமலிருக்கையில் அவனுடைய ஸங்கடங்களைப்போக்கி, அவனுக்கு ஸகலக்ஷேமங்களையும் உண்டுபண்ணுவது விசேஷமா? ஆனால் தன்னை ஒருதடவையாவது வந்து சரணமடைந்து, "நான் சக்தியற்றவன் ; உம்மைச்சரணமடைந்தேன் ; என்னை ரக்ஷிக்கவேணடும்" என்று ப்ரார்த்திப்பது சரணமடையவேண்டியவனுக்கு முக்யலக்ஷணமென்று ராமன் சொல்லியிருக்கிறார்.

மேலும் "சரணமடைகிறவனிடத்தில் தோஷங்களிருந்தாலும்" என்றதால் லோகத்தில் அபராதம் செய்கிறவர்கள் உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார்.

மேலும், தனக்கு கோர அபராதஞ் செய்தவனுக்கு அபயதானம் செய்திருப்பதாகத்தெரியவில்லை.

ஆ :—ராமனிடத்தில் அபயப்ரதானதர்மமானது பூர்ணமாக விளங்கவில்லையென்றால் வேறு எவரிடத்திலாவது காணப்படுகிறதா?

ஸ :—ஸீதையினிடத்தில் பூர்ணலக்ஷணங்களுடன் விளங்குகிறது.

தன்னை க்ரூரமாய் ஹிம்ஸித்த காகாஸுரனுக்குத் தானே சிபார்சுசெய்து ப்ராணனைத்தப்புவித்தாள்.

தன்னை அநேகவிதமாய் உபத்ரவித்துக்கொன்றுவிடுவதாயும், தின்றுவிடுவதாயும், சித்ரவதஞ்செய்வதாயும் பயமுறுத்தின ராக்ஷஸிகளைத் தண்டிக்கவேண்டுமென்ற எண்ணம் அவளுக்குக் கொஞ்சங்கூடவில்லை; அவர்களிடத்தில் கோபமுண்டாகவுமில்லை. த்ரிஜடை தான்கண்ட ஸ்வப்னத்தை அவர்களுக்குச்சொல்லி "அதிசீக்ரத்தில் ராமனிவ்விடம் வருவார். ராவணனை வேரில்லாமல் நாசஞ்செய்வார். ஸீதையும் ஸகலகஷ்டங்களும் தீர்ந்து தனது பர்த்தாவையடைவாள். அப்பொழுது உங்களுக்கு நாசகாலம் ஸமீபிக்கும். அதிலிருந்து தப்பித்துக்கொள்ளவேண்டுமானால் ஸீதையை நல்லவார்த்தைசொல்லிக் காப்பாற்றும்படி ப்ரார்த்திப்போம். கேவலம் தன்னை நமஸ்கரித்துச் 'சரணமடைந்தோம்' என்று சொன்னமாத்ரத்திலேயே அவள் ஸந்தோஷிக்கிறவள். அவள் மனஸ்வைத்தால் நம்மை ஆபத்துகளிலிருந்து காப்பாற்ற முடியும். ஆகையால் நாம் அவளைசரணமடைவோம்" என்று சொல்ல, அவர்கள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஸீதை அதையே அங்கீகாரமாக ஒப்புக்கொண்டு, "நான் உங்களைக்காப்பாற்றுகிறேன்" என்று அபயப்ரதானஞ்செய்தாள்.—(ஸுந்தரகாண்டம் 58.)

ராவணவதமானபிறகு ஹநுமார் ஸீதையிடத்திற்சென்று, "தாயே! தாங்கள் பதியைத்தவிர வேறுகதியில்லாமல் அசோகவனத்தில் துக்கப்படுக்கொண்டிருக்கும்பொழுது, இதோவிருக்கும் ராக்ஷஸிகள், தங்களை அநேகவிதமாய் ஹிம்ஸை செய்ததை நான் பார்த்துக்கொண்டிருந்தேன். இப்பொழுது நல்லஸமயம்; அவர்களுக்கு யஜமானனான ராவணன் நாசஞ்செய்யப்பட்டான்; அவர்களுக்கு வேறுகதியுமில்லை. தாங்கள் உத்திரவுகொடுத்தால் அவர்களை இருந்தவிடந்தெரியாமல் ஒருநொடியில் நாசஞ்செய்கிறேன்" என்று ப்ரார்த்தித்தார்.

ஸீதை அதற்கு ஸம்மதித்தாளா? என்ன மறுமொழி சொன்னாள் தெரியுமா? "இவர்கள் ராவணனுடைய வேலைக்காரிகள்;

ஸ்வாதீனமில்லாதவர்கள் ; அவனுக்குக் கட்டுப்பட்டு அவனுடைய ஆக்ஞைப்படி நடக்கிறவர்கள் ; அவர்களுக்கு என்மேல் என்ன த்வேஷம் ? அவர்களிடத்தில் யாராவது கோபிப்பார்களா ? என்னுடைய பூர்வஜன்மபாபத்தால் எனக்கு அப்படிப்பட்ட கஷ்டம் ஸம்பவித்தது. நான் செய்தகர்மத்தை நானே அனுபவிக்கவேண்டுமல்லவா ? எய்கிறவனிடத்தில் கோபிக்காமல் அம்பினிடத்தில் கோபிக்கலாமா ? ஆகையால் எனக்கு இவர்களிடத்தில் கோபமில்லை. இவர்களெனக்கு அபகாரம் செய்யவுமில்லை. ராவணன் இறந்தபிறகு அவர்கள் என்னை ஹிம்ஸைசெய்கிறார்களா ?

முன்னொருகாலத்தில் ஒரு வேடன் புலியால் துரத்தப்பட்டு ஒரு மரத்திலேறிக்கொண்டான். அங்கே ஒரு கரடி உட்கார்ந்திருக்கக்கண்டு, அதைச்சரணமடைய, அது "பயப்படாதே ! உன்னை ரக்ஷிக்கிறேன்" என்று ப்ரதிக்ஞை செய்தது. சற்றுநேரங்கழித்து வேடனுக்குத் தூக்கம்வரக், கரடியின்மடியில் தலையை வைத்துக்கொண்டு தன்னை மறந்து நித்ரைசெய்தான். அப்பொழுது, மரத்தடியிலிருக்கும் புலி, மரத்தின்மேலிருக்கும் கரடியைப்பார்த்துத் "தோழா ! நாமிருவரும் மிருகங்கள் ; ஒரேஜாதி ; ஒரே இடத்தில் வஸிப்பவர்கள் ; கஷ்டஸுகங்களில் ஸம்பந்தப்பட்டவர்கள். இவனோ மனுஷ்யன் ; அதிலும் வேடன் ; நமக்கு ஜன்மசத்ரு ; நம்மைக்கொல்வதே இவனுக்கு ஜீவனம் ; நமது ஜாதியானல்ல ; நமது தேசத்தானல்ல. இவனை நீ இப்பொழுது காப்பாற்றினாலும் அதை மறந்து நாளை உன்னைக்கொல்ல யத்னிப்பான். ஆகையால் அவனை என்னிடத்தில் தள்ளிவிடு. நமக்கு ஒரு பெரிய ஆபத்து நீங்கும்" என்று ப்ரார்த்தித்தது.

அதற்குக் கரடியும், "இதென்ன அந்யாயம் ! நானிருக்குமிடத்தைத்தேடிவந்து என்னைசரணமடைந்தவனை நான் கைவிடுவேனானால், எனக்கு இந்த லோகத்தில் 'மித்ரத்ரோஹி' என்று ஜனங்களின் நிந்தையும், பரலோகத்தில் கோரமான நரகமும் கிடைக்கும். ஆகையால் நீ சொல்லும் வார்த்தைகள் என் செவியில் நுழையாது" என்றது.

பிறகு அவ்வேடன் விழித்துக்கொண்டான். கரடிக்குத் தூக்கம் பிடித்து வேடனுடைய மடியில் தலையை வைத்துக்கொண்டு தூங்கிற்று. அப்பொழுது மரத்தடியிலிருந்த புலி, வேடனைப்பார்த்து, "முட்டாளே ! என்னிடத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகக் கரடியைசரணமடைந்தாயோ ? அது உனது ஜாதியா ? மித்ரனா ? உனது சத்ரு. நான் இந்த மரத்தைவிட்டு எப்பொழுது போவேனென்று காத்துக்கொண்டிருக்கிறது. உடனே உன்னைக்

கொன்றுவிடும். அது விழித்துக்கொள்வதற்குமுன் அதை என்னிடத்தில் தள்ளிவிடு. நான் உனக்குப்பதிலாக அதைத் தின்றுவிட்டுப்போகிறேன். நம்மிருவருடைய கார்யமும் நிறைவேறும்" என்றது.

வேடன் புலியின் வார்த்தையால் மயங்கிக் காடியிடத்தில் நம்பிக்கையில்லாமல் அதைக்கிழேதள்ளிவிட்டான். அது விழும்பொழுதே விழித்துக்கொண்டு தன் ஜாதிஸ்வபாவத்தால் ஒரு கிளையைப்பிடித்துத் திரும்பவும் மரத்திலேறி உட்கார்ந்தது. அப்பொழுது வேடன் தான் செய்த த்ரோஹத்திற்காகத்தன்னைக் காடி. கொன்றுவிடுமென்று பயந்துநடுங்க, காடியும், 'வேடா! பயப்படாதே! நீ செய்த அபகாரத்தை நான் நினைக்கவேமாட்டேன். நான் சொன்ன வார்த்தையையும் தவறமாட்டேன்' என்றது.

அப்பொழுது புலியானது, "தோழா! என்பேச்சு நிஜமாயிற்று? இவன், செய்நன்றிமறந்த மித்ரத்ரோஹியென்று இப்பொழுதாவது தெரிந்ததா? கொஞ்சங்கூட இரக்கம் வைக்காமல் இவனை என்னிடத்தில் தள்ளிவிடு" என்றது.

அதற்குக்காடி, "துஷ்டஸ்வபாவமுள்ளவர்கள் பிறர்க்கு அபகாரஞ்செய்தால், விவேகியானவன் அவர்களிடத்தில் கோபிப்பானா? அவர்களுக்குப்பதில் அபகாரம் செய்ய நினைப்பானா? நான் செய்த ப்ரதிக்ஞையைக்காப்பாற்றுவது பெரிதேயல்லாமல் என்னுயிர் பெரிதல்ல. ப்ராணிகளுக்கு ஸத்யமல்லவா பூஷணம்?" என்று மறுமொழிசொல்லித், தன்னைப் புலி எவ்வளவு ப்ரார்த்தித்தும் அதற்கு உட்படாமல், அன்றிராத்திரி முழுவதும் வேடனைக் காப்பாற்றிற்று.

ஆஞ்ஜநேயா! நான் ம்ருகத்திற்கும் கீழானவளா? நமக்கு க்ஷேமத்தைச் செய்தவர்களிடத்தில் நாமெப்படி ப்ரீதிவைத்து அவர்களுக்குபகாரம் செய்கிறோமோ, அப்படியே நமக்கபகாரம் செய்கிறவர்களுக்கும் நாமுபகாரஞ்செய்யவேண்டியது. நமக்குபகாரம் செய்கிறவர்களுக்கு நாமுபகாரம் செய்வது ஆச்சர்யமா? நமக்கபகாரம் செய்கிறவர்களுக்கு நாமுபகாரம் செய்வதல்லவோ விசேஷம்?

இருக்கட்டும். லோகத்தில் அபகாரம்செய்கிறவர்களே இல்லையென்று என்னபிப்ராயம். ஏனென்றால், எல்லோரும் பிறர்க்கபகாரம் செய்கிறதென்று ஏற்பட்டால் அது ஒரு தோஷமாகுமா? லோகத்தில் அபகாரம்செய்யாதவன் யார்? அப்படியொருவனிருந்தால் அவன் அபராதஞ்செய்தவர்களைத்தண்டிக்கட்டும். ஆலோசித்தால் எல்லோரையுந்தான் தண்டிக்கவேண்டும்.

உன்னுடைய ப்ரபுவான என் பர்த்தா முதலாவது அபராதி. லோகத்தில் புருஷனுக்குத்தன் பத்னியை ஆபத்திலிருந்து காப்பாற்றுவதும, அவளுடைய மானத்தை ரக்ஷிப்பதும் ஸ்வதர்மம். ஒருவன் எவ்வளவு அல்பனுயிருந்தாலும் தன் பத்னிக்குச் செய்த அவமானத்தைப்பொறுப்பானு? ராமனே புருஷன்; அதிலும் க்ஷத்ரியனுக்குப்பிறந்தவர்; அதிலும் மஹாபராக்ரம சாலிகளென்று பெயர்பெற்ற இக்ஷ்வாகுவம்சத்தைச்சேர்ந்தவர்; 'ஆயுதமெடுத்தவர்களுக்குள் நான் ராமன்' என்ற வசனப்படி வீர சிகாமணி; அப்படியிருக்கத் தன்ப்ரியபார்யையைத், தன்னை நம்பித் தன்னுடன் காட்டுக்கு வந்தவளை, ஒரு நீசன், ஒரு ராக்ஷஸன் தொட்டுத்தூக்கிக்கொண்டுபோய், அநேகமாஸங்கள்வரையில் சிறையில்வைத்து உபத்ரவித்தான். அதைப்பொறுத்துக்கொண்டிருந்தார். இது மனுஷ்யதர்மமா? க்ஷத்ரியதர்மமா? ஆகையால் முதலில் அவரைத்தண்டிக்கவேண்டியது.

நீ ஸுக்ரீவனுடைய ஸேவகன்; அவன்கட்டளைப்படி நடக்க வேண்டியவன். அதை அலக்ஷ்யஞ்செய்யவுங்கூடாது; மீறவுங் கூடாது. யஜமானன் கட்டளையிடாததைச்செய்கிறவனும், கட்டளையிட்டதைச்செய்யாதவனும் ஒன்றே. நானிருக்குமிடத்தைத்தேடிக்கண்டுபிடித்துச் சொல்லும்படி ஸுக்ரீவன் உனக்குக் கட்டளையிட்டானு? அசோகவனத்தையழித்து, ராவணனுடைய ஸைந்யங்களுடன் யுத்தஞ்செய்து, லங்கையைக்கொளுத்தும்படி கட்டளையிட்டானு? ஆகையால் யஜமானனுடைய ஆக்ஞையை மீறின நீ பெரிய அபராதி. உன்னைத்தண்டிக்கவேண்டியது.

இவ்வளவு பிறர்க்குபதேசஞ்செய்கிற நான் பெரிய அபராதி. நான் பதிவ்ரதையென்று பெயர் வைத்துக்கொண்டிருப்பவள்; க்ஷத்ரியனுக்குப்பிறந்தவள், க்ஷத்ரியனை விவாஹஞ்செய்துகொண்டவள்; பரபுருஷனை மனஸிலும் நினைக்கக்கூடாது. அப்படியிருக்க, ராவணன் என்னைத்தொட்ட அந்தக்ஷணத்திலேயே உயிரைவிடவேண்டியது என தர்மம். அப்படிச்செய்யாமல் இவ்வளவுகாலம் நான் உயிரைவைத்துக்கொண்டிருப்பது மஹாபாபம். ஆகையால் முதலாவது என்னைத்தண்டிக்கவேண்டியது.

இப்பொழுது ராமமூர்த்தியையும் என்னையும் உன்னையும் தண்டித்துவிட்டுப், பிறகு ராக்ஷஸிகளுடைய விஷயத்தைக்கவனிப்போம்" என்று சொல்லியிருக்கிறுள்.—(யுத்தகாண்டம் 116.)

சரணமடைந்தவர்களைக்காப்பாற்றுகிற தர்மம் ராமனிடத்தில் விளங்குகிறதா? ஸீதையினிடத்தில் விளங்குகிறதா? புத்தி

டான்கள் இன்னுமநேககாரணங்களைக்கொண்டு ஊஹிக்கலாம். ஆகையால, ராமனுடைய மஹிமையைக்காட்டிலும் ஸீதையினு டைய மஹிமையே மேலானது என்ற அபிப்ராயத்தை மஹாரிஷி வெளியிட்டிருக்கிறார்.

ராமாயணத்தைப் பாடினர்கள்.—ராமன் அயோத்யையில் அர சாண்டுவரும்பொழுது லவணனென்ற ராக்ஷஸனை வதஞ்செய்வதற்காகச் சத்ருக்னனையனுப்பினார். அவரும அந்த அஸுரனைக்கொன்று, பன்னிரண்டுவர்ஷங்களுக்குப்பிறகு அயோத்யைக்குத்திரும்பிவருகையில், வால்மீகியினுடைய ஆசரமத்தில் தங்கினார். அங்கே ராமனுடைய சரித்ரத்தை மஹர்ஷியின் சிஷ்யர்கள் மதுரமாய்ப்பாடுவதைத் தானும் தன்பரிவாரங்களுங்கேட்டு மெய்மறந்தார்கள்.— (வா-ரா. 7. 71.)

பிறகு, ராமன அச்வமேதயாகம் செய்கையில், வால்மீகி மஹர்ஷி அவ்விடத்திற்குத் தன்சிஷ்யர்களுடன் சென்று குசலவர்களைப்பார்த்துக் "குழந்தைகளே! நீங்கள் ஸாவதானமாய் ஸந்தோஷத்துடன ராமாயணம் முழுவதையும் ரிஷிகளிருக்குமிடத்திலும், ப்ராஹ்மணாகளிருக்குமிடத்திலும், தெருக்களிலும், ராஜவீதிகளிலும, ராஜாக்களுடைய கிருஹங்களிலும், ராமனுடைய அரண்மனைவாசலிலும், யாகஞ்செய்யும் ரித்விக்குகளிருக்குமிடத்திலும் பாடுங்கள். நமது ஆச்ரமத்திற்கு ஸமீபத்திலிருக்கும் பர்வததிலுண்டாகும் பழங்களையும வேர்களையும புஜித்தால் உங்களுக்குப்பாடும்போது சரமமுண்டாகாது. நீங்கள நகரத்திற்குவெளியில் வஸிக்கவேண்டியது. ராமசந்த்ரமஹாராஜா ஒருக்கால் உங்களைப்பாடும்படி ஆக்ஞாபித்தால, ரிஷிகள் உட்கார்ந்திருக்கும்பொழுது பாடுங்கள். நான் பூர்வததில் அமைத்த தாளங்களையனுஸரித்து ஒவ்வொருநாளும இருபதுஸர்க்கங்களை மதுரமாய்ப்பாடவேண்டியது. தனத்தில் கொஞ்சமாவது இச்சைவைக்கக்கூடாது. பழங்களையும் கிழங்குகளையும் புஜித்துக்கொண்டு ஆச்ரமங்களில் வஸிக்கும் நமக்குத் தனத்தாலாகவேண்டியதென்ன? வீணை முதலிய வாத்யங்களுக்கும் தாளங்களுக்கும் ஒத்துக் காவ்யத்தின் ஆரமபம்முதல் பாடுங்கள். நீங்கள் மஹாராஜாவிற்குத்தகுந்த மர்யாதைசெய்யவேண்டியது. தர்மமாய் லோகத்தை ரக்ஷிப்பதால அவர் எல்லாருக்கும் பிதா" என்று ஆக்ஞாபித்தார்.

அவர்களும் மறுநாள்காலையில் நித்யகர்மங்களை முடித்துக்கொண்டு மஹர்ஷியின் உத்திரவுப்படி ராமாயணத்தைப்பாட ஆரம்பித்தார்கள். ராமனும் மஹர்ஷியால் செய்யப்பட்ட அந்த

அபூர்வமான காவ்யத்தை உத்தமமான கானத்துடன் பாடக்கேட்டு, விசேஷ ஆநந்தத்தையடைந்தார். பிறகு ராஜ்யகர்மங்களுக்கிடையில், ஓய்வுகாலத்தில், மஹர்ஷிகளையும், அரசர்களையும், பண்டிதர்களையும், தர்க்கம், புராணம், வ்யாகரணம், சந்தஸ், ஸ்வரலக்ஷணம், ஸங்கீதசாஸ்த்ரம், ஸாமுத்ரிகாசாஸ்த்ரம், அலங்காரசாஸ்த்ரம், விருத்தசாஸ்த்ரம், ஜ்யோதிஷம், வைதிகக்ரியைகள், காவ்யங்கள், தேசபாஷைகள், நாட்யம், சித்ரம், வேதங்கள், ராஜநீதி, வேதாந்தம், கலைகள் முதலியவைகளில் ப்ரஸித்திபெற்றவர்களையும், ராமாயணத்தைக் கேட்கவேண்டுமென்று விரும்பின ப்ராஹ்மணோத்தமர்களையும், தன்ஸபைக்கு வரவழைத்துக் குசலவர்களைப்பாடும்படி உத்திரவு செய்தார். அப்பொழுது அங்கிருந்தவர்களெல்லோரும் ராமனையும் அச்சிறுவர்களையும் இமைகொட்டாமற்பார்த்து, "ரிஷிவேஷம்பூண்ட இந்தச் சிறுவர்களுக்கு ஜடை, மரவுரி முதலியவைகளில்லாவிட்டால், நமது மஹாராஜாவிற்கும் இவர்களுக்குங்கொஞ்சங்கூட பேதமிருக்காது" என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டார்கள். அப்பொழுது குசலவர்கள், கந்தர்வர்களைப்போல ராமாயணகாவ்யத்தை நாரதரால் சொல்லப்பட்ட முதல்ஸர்க்கம் முதற்கொண்டு இருபதுஸர்க்கங்கள்வரையில் பாடினார்கள். கேட்பவர்கள் மெய்மறந்து பொழுதுபோனது தெரியாமல் ஆநந்தஸமுத்ரத்தில் மூழ்கியிருந்தார்கள்.

அவர்கள் பாடிமுடிந்தபிறகு ராமன் லக்ஷ்மணனைப்பார்த்து, "இந்தச் சிறுவர்களுக்குப் பதினெண்ணாயிரம் தங்கநாணயங்களையும் இன்னும் அவர்களபேக்ஷிக்கும் வஸ்துக்களையும் கொடு" என்றார். லக்ஷ்மணன் அப்படியே கொடுக்கும்பொழுது, அவர்கள், "எங்களுக்குத் தனத்தால் என்ன ப்ரயோஜனம்? நாங்கள் வனத்தில் வஸிக்கிறவர்கள்; பழம் கிழங்கு முதலியவைகளைப்புஜிக்கிறவர்கள்; வனத்தில் இந்தத்தனத்தை என்ன செய்வோம்!" என்றார்கள். அதைக்கேட்டு ராமனும் அந்தஸபையிலிருந்தவர்களும் மிகவும் ஆச்சர்யமடைந்தார்கள். ராமன் அந்தக்காவ்யத்தின் வரலாற்றைக்கேட்க இச்சைப்பட்டுக் "குழந்தைகளே! நீங்கள் பாடும் காவ்யத்திற்கு என்ன ப்ரமாணம்? அதைச் செய்தவருடைய யோக்யதை எவ்வளவு? அவருடைய வாஸமெங்கே?" யென்றார். அவர்கள், "ஸ்வாமி! பிருகுவம்சத்தில் பிறந்த வால்மீகிபகவான் நாங்கள் பாடும் காவ்யத்தைச்செய்தவர். அவர் இதை அநேக உபாக்யானங்களுடன், 7 காண்டங்கள், 500 ஸர்க்கங்கள், 24,000 ச்லோகங்களாகச் செய்திருக்கிறார். இந்த லோகத்தில் ஜீவகோடி

கள் எதுவரையிலிருக்குமோ அதுவரையில் தங்களுடைய சரித்ரமாகிய இந்தக்காவ்யத்தின் கீர்த்தியும் ப்ரகாசிக்கும். தங்களுக்கிஷ்டமிருந்தால் ராஜ்யகார்யங்களுக்கிடையில் ஓய்வுகாலத்தில நாங்கள் பாட ஸித்தமாயிருக்கிறோம்'' என்றார்கள். அப்படியே ராமனும் தன் பரிவாரங்களுடன் அந்தக்காவ்யத்தை அநேகதினங்கள் கேட்டார்.

ஸீதை பூமியில் ப்ரவேசித்தபிறகு ராமன் விசேஷகோபங்கொண்டதைக்கண்டு, ப்ரஹ்மா, "ராம! இந்த உத்தமகாவ்யம் தமது சரித்ரத்தை ஸம்பூர்ணமாய் வர்ணிக்கிறது. இதனால் தமக்கு இனிமேல் நடக்கப்போகிற விஷயங்களும் தெரியும். இது ஆதிகாவ்யம். காவ்யத்தால் கீர்த்தியை அடையத்தகுந்தவர் உம்மைத்தவிர யார்? இதை நானும் ஸகல தேவர்களும் முன்னமேயே கேட்டிருக்கிறோம். இதில் சொல்லப்பட்டிருக்கிறதெல்லாம் ஸத்யம். ஆகையால் கேட்டதுபோக மிகுதியாயிருக்கிறதை ஸாவதானமாய்க்கேளும்'' என்று சொல்லிததன்னுலகம சேர்ந்தார். அப்பொழுது ப்ரஹ்மலோகத்தில் வஸிக்கும் ரிஷிகளும உத்தரராமாயணத்தைக்கேட்க விரும்பி ப்ரஹ்மாவிடத்தில அனுமதி பெற்றுக்கொண்டு ராமனுடைய ஸபைக்கு வந்தார்கள். பிறகு ராமன் வால்மீகியைப்பார்தது, "ஸ்வாமி! ப்ரஹ்மலோகத்து ரிஷிகள் எனக்கு இனிமேல நடக்கும் விஷயங்களைக்கேட்க விருப்பங்கொண்டு இங்கேவந்திருக்கிறார்கள். நாளைமுதல் பாதியினமும் குசலவர்களைப்பாடும்படி ஆக்ஞாபிக்கவேணடும்'' என்று ப்ரார்த்தித்தார். அப்படியே அவர்களும் ராமாயணத்தைப்பாடிமுடித்தார்கள்.—(ஷை 93, 94, 98, 99.)

32. **வாத்யங்கள்**:—ததம், ஸுஷிரம், அவனத்தம், கனம். என நான்கு வகை. தந்த்ரீகளுடன் கூடின வாத்யங்கள் ததமென்றும்; துளையுள்ள வாத்யங்கள் ஸுஷிரமென்றும்; தோலால் மூடப்பட்டவை அவனத்தம் என்றும்; ஒன்றையொன்று அடிக்கும் வாத்யங்கள் கனம் என்றும் சொல்லபபடும். முதலிரண்டும் ச்ருதிஸம்பந்தமுள்ளவை; அவனத்தத்தினால் கீதம் மதுரமாகிறது; கனத்தினால் அளக்கப்படுகிறது.

ததமென்பது வீணை முதலியவை; அது ச்ருதிவீணையென்றும், ஸ்வரவீணையென்றும் இருவகை. ஸ்வரவீணையில், ஒருதந்த்ரியுள்ள ஏகதந்த்ரீ (ப்ரஹ்மவீணை); இரண்டுதந்த்ரிகளுள்ள நகுலன்; மூன்று தந்த்ரிகளுள்ள த்ரிதந்த்ரிகா (ஜந்த்ரா); ஏழுதந்த்ரிகளுள்ள சித்ரா; ஒன்பதுதந்த்ரிகளுள்ள விபஞ்சிகா; இருபத்தொருதந்த்ரிகளுள்ள மத்தகோகிலா (ஸ்வரமண்டலம்); ஆலாபினி, கின்

ணரீ, பினாகீ, நிச்சங்கவீணா முதலிய பேதங்களுமுண்டு. [ஸரஸ்வதியின் வீணைக்குக் கச்சபீயென்றும், நாரதருடைய வீணைக்கு மஹதீயென்றும், தும்புருவின் வீணைக்குக் களாவதீயென்றும், விச்வாவஸுவின் வீணைக்குப் ப்ருஹதீயென்றும் பெயர்.]

நாதம், ச்ருதி, ஸ்வரம், க்ராமம், ராகம் முதலியவைகளின் தத்வங்களையறிந்தவனும், அழகான சரீரத்தையுடையவனும், உட்கார்ந்தவிடத்தைவிட்டு அசையாதவனும், கைகள் சளைக்காதவனும், பயமில்லாதவனும், இந்த்ரியங்களை ஜயித்தவனும், தீக்ஷ்ணபுத்தியுள்ளவனும், மதுரமான குரலுள்ளவனும், பாட்டிலும் வாத்யங்களை வாசிப்பதிலும் ஸமர்த்தனும், ஓரேவிஷயத்தில் மனஸைச்செலுத்தக்கூடியவனுமிருப்பதே வீணைவாசிப்பவனுடைய குணங்கள்.

துளைகளில் விரல்களை வைப்பதில் நல்லபழக்கமுள்ளவனும், உட்கார்ந்த இடத்தைவிட்டசையாதவனும், எல்லாஸ்வரஸ்தானங்களிலும வேகமாய்ப்போய்வருகையில் மதுரமான த்வனியுடன் ராகஙகளினுடைய ஸ்வரூபத்தை நன்றாய் விளக்கிக்காட்டுகிறவனும், பாடுவதிலும் வாத்யங்களை வாசிப்பதிலும் ஸமர்த்தனும், தன்னுடன் பாடுகிறவர்களுக்குப் பாடும் ராகத்திற்குத்தகுந்தபடி ராகச்சாயையைக் காட்டுகிறவனும், அவர்களுடைய தோஷங்களை மறைக்கிறவனும், ந்யாயமான ஸ்வரஸ்தானங்களில் ராகங்களை வாசிப்பதைப்போல் ராகங்களுக்கு ஏற்படாத ஸ்வரஸ்தானங்களிலும் அந்த ராகங்களை வாசிப்பவனுமிருப்பது வம்சமென்ற வாத்யத்தை வாசிப்பவனுடைய குணங்கள்.

மேற்சொன்ன குணங்களுக்கு எதிரான லக்ஷணங்களும், ஒரு ராகத்திற்கு ஏற்படாத ஸ்வரங்களில் கமகங்களை ஆலாபிப்பதும், தான் குறித்த ஸ்வரஸ்தானத்தை எட்டமுடியாமலிருப்பதும், தலையை அசக்குவதும் தோஷங்கள்.

ப்ரதானமாய் ஒருவனும், அவனையனுசரித்து நான்கு பெயர்களுமிருக்கவேண்டும்.

ஸுஷிரம் என்பது, வம்சம், பாவம், பாவிகா, முரளீ, மதுகரீ, காஹளா, துண்டுகினீ, சுக்கா, சிருங்கம், சங்கம் முதலியவை.

படஹம், மர்த்தலம், ஹுடுக்கா, கரடா, கடம், கடவம், டவசம், டக்கா, குடுக்கா, குடுவா, ருஞ்சா, டமருகம், டக்கா, மண்டிடக்கா, டக்குலீ, ஸெல்லுகா, ஜல்லரீ, பாணம், த்ரிவலீ, துந்துபீ, பேரீ, நிஸ்ஸாணம், தும்பகீ என்றவைகள் அவனத்தவாத்யத்தின் பேதங்கள்.

தாளம், காம்ஸ்யதாளம், கண்டா, க்ஷுத்ரகண்டிகா, ஜயகண்டா, கல்ரா, சக்தி, பட்டம் முதலியவை கனவாத்யங்களின் பேதங்கள்.

அரசர்களுடைய அபிஷேககாலத்திலும், யாத்ரையிலும், உத்ஸவங்களிலும், விவாஹம், உபநயனம் முதலிய மங்களகார்யங்களிலும், பூகம்பம் முதலியவை நேரிட்டபோதும், யுத்தத்திலும், வீரரஸம் ரௌத்ரரஸங்களைக்காட்டும் நாடகங்களில் நாடகசாலையில் பாடுவோர்களும் நாட்யஞ் செய்கிறவர்களும் நாடகத்தில் வேஷந்தரிப்பவர்களும் இடையில் ஓய்ந்திருக்கும்பொழுதும் மேற்சொன்ன வாத்யங்கள் வாசிக்கப்படும். அவை வீரர்களுக்கு உத்ஸாஹத்தையும் தைர்யத்தையுமுண்டுபண்ணி க்ஷேமத்தைக்கொடுக்கும்.

வம்சம் (புல்லாங்குழல்) என்ற வாத்யமானது மூங்கில், கருங்காலி, யானைத்தந்தம், சந்தனம், இரும்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம் முதலியவைகளால் செய்யப்படும். அதில் வாயைவைத்து ஊதும் துளைக்கும் முடிவிலிருக்கும் துளைக்கும் நடுவில் இரண்டங்குல தூரமுள்ள உமாபதி, த்ரிபுருஷம் (3), சதுர்முகம் (4), பஞ்சவக்த்ரம் (5), ஷண்முகம் (6), முனி (7), வஸு (8), நாதேந்த்ரம் (9), மஹாநந்தம் (10), ருத்ரம் (11), ஆதித்யம் (12), மனு (14), கலாநிதி (16), அஷ்டாதசாங்குலம் (18) என்றபேதங்கள். 13, 15, 17 அங்குலங்களுள்ளவைகளில் ஸ்வரபேதங்கள் நன்ருய்த்தெரியாததால் அவைகள் ஒப்புக்கொள்ளப்படவில்லை. முரளி (20), ச்ருதிநிதி (22) என்றபேதங்களுமுண்டு; இது மிகவும் தாழ்ந்த த்வனியை உண்டாக்குவதால் இவைகளை உபயோகிக்கிறதில்லை. ஐந்து அங்குலங்களுக்குக் குறைந்த வம்ச வாத்யங்கள் அதிக உச்சஸ்வரங்களையுடையவைகளாயிருக்குமாகையால் உபயோகப்படுகிறதில்லை.

பாவம் என்பது மூங்கிலால் செய்யப்பட்டது. ஒன்பது அங்குல நீளமுள்ளது. தகரப்பட்டங்கள் கட்டினது.

பாவிகா என்பது மூங்கிலாற்செய்யப்பட்டது. 12 அங்குல நீளமுள்ளது. ஊதுவதற்கு ஒரு துளையும் ஸ்வரங்களுக்கு ஐந்து துளைகளுமுள்ளது. நாகர்களையும் யக்ஷர்களையும் வசப்படுத்தக்கூடியது.

முரளியென்பது இரண்டுசாணுக்கு மேற்பட்ட நீளமுள்ளது. ஸ்வரங்களுக்காக நான்கு துளைகளுள்ளது.

மதுகரியென்பது கொம்பினுலாவது மரத்தாலாவது செய்யப்பட்டது. 28 அங்குல நீளமுள்ளது. ஊதும் துளையிலிருந்து 4

அங்குலங்கள் விட்டு ஸ்வரங்களுக்காக 7 துளைகள் செய்யவேண்டியது. அவைகளுக்கும் ஊதும் துளைக்கும் நடுவில் வாத்யத்தின் அடிபாகத்தில் வேறொருதுளை செய்யவேண்டியது. மதுரமான த்வனியுண்டாவதற்காக அதின் வாயில் நுட்பமான ஓர் தாம்ர குழாயை வைக்கவேண்டியது. வாசிக்கும்போது இடதுகைக் கட்டைவிரலால் அதை மூடித்திறக்கவேண்டியது.

காஹளமென்பது மூன்றுசாண் நீளமுள்ளது. தாம்ரம், வெள்ளி அல்லது தங்கத்தாற் செய்யப்பட்டது. ஊமத்தம்பூவைப் போன்ற முகத்தையுடையது. ஹா, ஹூ என்ற சப்தங்களைக் கொடுக்கக்கூடியது. வீரர்களுடைய பிருதுகளைக்கூறும் ஸமயத்தில் வாசிக்கவேண்டியது.

அதே இரண்டுசாண் நீளமுள்ளதாயிருந்தால் துண்டுகினியென்று சொல்லப்படும். துருதரி, தித்திரீ என்றும் பெயருண்டு; அதே நான்குசாண் நீளமிருந்தால் சுக்காவென்று சொல்லப்படும்.

சிருங்கம் அல்லது கொம்பு என்ற வாத்யமானது யானையின் முகத்தைப்போன்ற முகத்தையுடையது. கோர்த்தியாயும் வழவழுப்பாயும் கெட்டியாயுமிருக்கும். எருமைக்கொம்பால் செய்யப்பட்டது. த்வனி அதிகப்படுவதற்காக இதனடியில் ஊமத்தம்பூவைப்போன்ற 8 அங்குல நீளமுள்ள காளைமாட்டின் கொம்பை ஒட்டவேண்டியது. அதின் நுனியில் 2, 3 அங்குலங்கள் வெட்டிவிட்டு ஊதுவதற்கிடமேற்படுத்தவேண்டியது. தூ, தூ வென்ற சப்தங்களைக் கொடுக்கக்கூடியது. இது மாடுமேய்ப்பவர்கள் விளையாடும்போது உபயோகிக்கும் கம்பீரமான த்வனியையுடைய வாத்யம்.

சங்கமென்பது தோஷமில்லாததாயும் ஆழமான மத்யத்தையுடையதாயும், பதினொருஅங்குல நீளமுள்ளதாயுமிருக்கவேண்டியது. அடிமுதல் நுனிவரையில் வரவரக்குறுகியிருக்கவேண்டியது. ஊதும் துளை அரை அங்குலம் விஸ்தாரமாயிருக்கவேண்டியது. காற்றை அதிகமாய் உள்ளுக்கிழுத்து அடக்கிக்கொண்டும், தோ, திகி, தித் என்ற சப்தங்களை வாசிக்கவேண்டியது.

மார்கி, தேசி என்ற பேதங்களுக்கொத்து படஹம் இரண்டுவகை. தேசிபடஹத்தை உத்தலீயென்றும் அட்டாவஜம் என்றும் சொல்வார்கள். வோல்லாவணீ, சல்லாவணீ, உடுவம், குஸும்பினீ, சாருச்ரவணிகா, அக்னம், பரிச்ரவணிகா, ஸமப்ரஹாரம், குடுபவாரணு, கரவாரணு, தண்டஹஸ்தம், கனாவம் என்று படஹஜாதி வாத்யங்கள் 12.

வல்லீ, வல்லீபாடம், தத்தா, பேதம், ஜடப்பணீ, அநச்ரவணிகா, ஹஸ்தம், ஜோடணித்ரிகுணை, பஞ்சஹஸ்தம், பஞ்சபாணி, பஞ்சகர்த்தரீ, சந்த்ரகலா என்ற ஹஸ்தக்ஷர வாத்யபேதங்கள் 13.

கடமென்ற வாத்யமானது கெட்டியாயும் வழவழப்பாயும் நன்றாய்ச் சுடப்பட்டதாயும் குறுகினவாயும் பருத்தவுடலுமுள்ளதாயும் மூகத்தில் தோலால் மூடப்பட்டதாயுமிருக்கும்; இரண்டு கைகளால் வாசிக்கப்படும் வாத்யம்.

துந்துபீ என்பது மேகங்களின் சப்தத்தைப்போல் கம்பீரமான த்வனியையுடையது கோம் என்ற சப்தத்தைக்கொடுக்கிறதும்; மங்களகார்யங்களிலும் தேவாலயங்களிலும் ஜயகாலத்திலும் வாசிக்கவேண்டியது.

கனவாத்யங்கள் அக்னியில் சுத்தஞ்செய்யப்பட்ட வெண்கலத்தால் அமைக்கப்பட்டவை.

கண்டா (மணி) என்றது தேவதார்ச்சனைஸமயத்தில் வாசிக்கவேண்டியது.

31. **ஸங்கீதசாஸ்த்ரத்தின் மர்மத்தை ஸங்கீதப்ரவர்த்தகர்கள்.**—ஸதாசிவன், பார்வதீ, ப்ராஹ்மா, பரதர், கச்யபர், தமங்கர், யாஷ்டிகர், துர்க்கை, சக்தி, பரத்வாஜர், கௌதமர், வஸிஷ்டர், ச்யவனர், பிருங்கி, யாக்ஞவல்க்யர், பிருஹஸ்பதி, சுக்ரர், விநாயகர், ஸுப்ரஹ்மண்யர், சார்ங்கதேவர், ஸோமநாதர், சார்துலர், கோஹளர், விசாகிலர், தந்திலர், கம்பளன், அச்வதரன், வாயு, விசுவாவஸு, ரம்பை, அர்ச்சுனன், நாரதர், தும்புரு, ஆஞ்ஜநேயர், மாத்ருகுப்தன், ராவணன், நந்திகேச்வரர், ஸ்வாதி, குணன், பிக்ஷுராஜன், க்ஷேத்ரராஜன், ராஹளன், ருத்ரஸேனராஜன், போஜராஜன், பரமப்தி, ஸோமேசர், லோல்லடன், உத்படன், சங்குகன், பட்டன், அபிநவகுப்தன், கீர்த்திதரன் முதலியவர்கள் ஸங்கீதசாஸ்த்ரத்தில் நிபுணர்கள்.

[ஹாஹா, ஹூஹூ, உஷா, ஆதிசேஷன்—ஸங்கீதபாரிஜாதம்.]

ஸங்கீதலக்ஷணம்.—கீதம், வாத்யம், நிருத்யம் இம்மூன்றும் சேர்ந்து ஸங்கீதமெனப்படும்.

ஸங்கீதவிபாகம்.—மார்க்கம், தேசீ என இருவகை. ப்ராஹ்மா முதலானவர்களால் தேடிக்கண்டுபிடிக்கப்பட்டுப் பரமசிவனுக்கு முன்னால் பரதர் முதலியவர்களால் பாடிக்காட்டப்பட்டது மார்க்கமெனப்படும். ஒவ்வொரு தேசத்திலுள்ள ஜனங்களின்

ஸ்வபாவத்திற்குத்தகுந்தபடி அவர்களுக்கு ஆநந்தத்தைக்கொடுக்கும் கானமும் வாத்யமும் ந்ருத்யமும் **தேசீ** எனப்படும்.—

[மார்கீ என்ற ஸங்கீதபேதத்தை பரதமஹர்ஷி, ப்ரஹ்மாவிடத்தில் கற்று அப்ஸரஸ்களையும் கந்தர்வர்களையுங்கொண்டு பரமசிவன் முன்னிலையில ப்ரயோகித்துக்காட்டினார். ஒவ்வொருதேசத்திலும் ஸ்த்ரீகள், பாலர்கள், பசுக்களை மேய்ப்பவர்கள், அரசர்கள், அவரவர்களிஷ்டப்படி ஆநந்தம் மேலிட்டுப்பாடும் பாட்டு **தேசீ** எனப்படும்.

ஸங்கீதம் இருவகை: நிபத்தம்—ஆலாபம் முதலியவைகளால் அமைக்கப்பட்டது; இதே **மார்க்கம்** எனப்படும். அநிபத்தம்—ஆலாபம் முதலியவைகளால் அமைக்கப்படாதது; இதே **தேசீ** எனப்படும்.—மதங்கர்.]

மார்கியென்ற பேதமானது ஆரியர்களுக்குள் முன்காலத்தில் வழங்கினதாய்த் தெரிகிறது. இப்பொழுது ஸங்கீதக்ரந்தங்களில் சொல்லப்படுவதைத்தவிர அதை லக்ஷணங்களுடன் ப்ரயோகித்துக்காட்டுவோர்கள் இல்லை. தற்காலத்தில் தேசியென்ற பேதமே வழங்குகிறது ஆரம்பத்தில் இது பௌத்தராஜாக்களின் காலத்திலிருந்த ஸங்கீதநிபுணர்களால் விசேஷமாய் ஆதரிக்கப்பட்டுப் பிறகு மஹம்மதியர்களுடைய ராஜாங்கத்திலிருந்த வித்வான்களால் விருத்திசெய்யப்பட்டது. அவர்கள் ஹிந்துத்ருவபதமார்க்கத்திலிருந்து **க்யால்** என்ற பேதத்தையும், க்யாலிலிருந்து டப்பா என்ற பேதத்தையும் உண்டுபண்ணினார்கள். ஸாமவேதகானமானது **ப்ரஸ்தாவம், உத்கீதம், ப்ரதீஹாரம், நிதனம்** என்று நான்குபாகங்களுள்ளது. அப்படியே தக்கால த்ருவபதமார்க்கமும், **அஸ்தாயீ அந்தர**, ஸஞ்சார, **அயோக** என்ற நான்கு பாகங்களையுடையது. இந்த மார்க்கத்தைக்கண்டுபிடித்த **தான்ஸேன்** என்ற மஹா வித்வான் வைதிகலௌகிக கானங்களில் நிபுணரென்று தெரியவருகிறது. இவருடைய காலத்திற்குமுந்தி மார்க்கம் என்ற ஸங்கீதம் வழங்கிவந்ததென்றும், அதற்குப்பிறகு தேசி என்ற ஸங்கீதத்தினுடைய ப்ரபலகாலமென்றும் சொல்லலாம்.

முற்காலத்தில் **ஆர்ச்சிகம்** என்ற பேதமானது ஒரு ஸ்வரத்தையுடையது; **காதிகம்** என்றது இரண்டுஸ்வரங்களையுடையது; **ஸாமிகம்** என்றது மூன்றுஸ்வரங்களையுடையது; **ஸ்வரந்த்ரம்** என்றது நான்குஸ்வரங்களையுடையது; வேதத்தில் வழங்கும் **உதாத்தம், அனுதாத்தம்; ஸ்வரிதம்** என்ற மூன்றுஸ்வரங்களிலிருந்து இப்பொழுது வழங்கும் ஏழுஸ்வரங்கள் ஏற்பட்டன. எப்படியென்றால், பாணினியென்பவர் வ்யாகரணஸூத்ரத்தில் மேற்கண்ட வைதிக

ஸ்வரங்களையே ஆதிஸ்வரங்களென்றும், தன்னுடைய சிக்ஷையென்ற க்ரந்தத்தில் உதாத்தஸ்வரத்தில் காந்தாரமும் நிஷாதமும், அனுதாத்தஸ்வரத்தில் ரிஷபமும் தைவதமும், ஸ்வரிதஸ்வரத்தில் ஷட்ஜமும் மத்யமமும் பஞ்சமமும் அடங்கியிருக்கின்றனவென்றும் சொல்லுகிறார்.

நிருத்யம வாத்யத்தை ஒட்டினது; வாத்யம் கீதத்தை ஒட்டினது.

ஸங்கீதத்தின் உற்பத்தி.—ஸாமவேதத்தில் உத்கிருஷ்டம், ப்ரதமம, த்விதீயம், த்ருதீயம், சதுர்த்தம், மண்டம் முதலிய ஸ்வரங்களிலிருந்து ஷட்ஜம் முதலிய ஏழுஸ்வரங்களையும் ப்ரஹ்மா எடுத்துக் கீதத்தைச்செய்தார்.

நாதத்தின் உத்பத்தி.—ஆத்மாவானது தன்னபிப்ராயத்தைவெளிப்படுத்தவேண்டுமென்று மனதைத்தூண்டிவிடுகிறது; அது தேஹத்திலிருக்கும் அக்னியைத் தாக்குகிறது; அது வாயுவைத் தூண்டிவிடுகிறது; அது ப்ரஹ்மக்ரந்தியிலிருந்து க்ரமமாய் மேல்பாகங்களில் ஸஞ்சரிக்கும்பொழுது நாபி, ஹிருதயம், கண்டம், சிரஸ், வாய் முதலியவைகளின் வழியாய் த்வனியை வெளிப்படுத்துகிறது.

நாதவிபாகம்.—அவைகளுக்கு அதிஸூக்ஷ்மம், ஸூக்ஷ்மம், புஷ்டம், அபுஷ்டம், கிருத்ரிமம என்று பெயர். சிரவில, ஸஞ்சாரீ, ஆரோஹீ என்ற வர்ணங்களுக்கு இடமில்லாததால் கழுத்திலுண்டாகும் சப்தம பூர்ணமென்றும, சிரஸிலுண்டாகும் சப்தம் அபூர்ணமென்றும சொல்லப்படும். வ்யவஹாரத்தில் நாதம ஹிருதயத்திலிருந்துண்டாகும்பொழுது மந்த்ரம் என்றும், கண்டத்திலிருந்துண்டாகும்பொழுது மத்யமென்றும், சிரஸிலிருந்துண்டாகும்பொழுது தாரமென்றும பெயரையடைகிறது. ஒன்றிற்கொன்று இரண்டுமடங்கு பலத்தையுடையவை.

நாதம் ஆஹதம், அனாஹதம் என இருவகை. மோக்ஷஸாதனமாகிற த்யானமானது, காட்டினவிடத்திலின்று அசையாத சித்தத்தையுடையவர்களுக்கே ஸாத்யமாகும்; ஸாதாரணஜனங்களுக்குப் பொருந்தாது. ஆகையால், ரிஷிகள் அதற்கு ஸுலபமான உபாயமாக ப்ரணவத்தின் அனாஹதநாதத்தைக் குருவினால் உபதேசிக்கப்பட்ட மார்க்கப்படி உபாஸிக்கிறார்கள். ச்வாஸத்தையடக்கி, இரண்டு காதுகளையும் கட்டைவிரல்களால் மூடிக்கொண்டால் ஓர்வித நாதம் கேட்கப்படும். அதில் மனதைச் செலுத்திக் கவனித்தால் அதிலிருந்து ஒன்றின்பின் ஒன்றாய் 10 வித நாதங்களுண்டாகும். அவைகளில் கடைசியில் கேட்கப்படும் நாதத்தில்

மனஸை லயப்படுத்தினால் த்யானம் ஸுலபமாகும். ஆனால் இது ஸாதாரணமாய் ஜனங்களுக்கு இன்பத்தைக்கொடுக்காது. ஆகையால், ஆஹதநாதத்தை ச்ருதிகள் மூலமாய் ஜனங்களுடைய செவிக்கும் ஹிருதயத்திற்கும் இன்பத்தையுண்டுபண்ணும்படி அமைத்து, அதில் மனஸை லயப்படுத்தி, அதைப் பகவானுடைய குணங்களை வர்ணிப்பதற்கு ஓர் கருவியாக உபயோகித்து, அதன்மூலமாய் அவரை த்யானித்து, சீக்ரத்தில் மோக்ஷத்தையடையவேண்டுமென்ற மஹாகருணையுள்ள பூர்வர்ஷிகள் ஸங்கீதசாஸ்த்ரத்தை ஏற்படுத்தினார்கள்.

நாதம், ஹிருதயத்திலிருந்து மேலே செல்லும் 22 நாடிகளின் வழியாய்ச்செல்வதால் 22 ச்ருதிகளென்னப்படும். இப்படியே கண்டத்திலும் சிரஸிலுமுண்டாகும் நாதங்களும் மேற்சொன்னபடி பேதப்படும். அவைகள் ஐந்து ஜாதிகளாக வகுக்கப்பட்டு ஏழுஸ்வரங்களிலமைக்கப்பட்டிருக்கின்றன.

ச்ருதிசக்ரம்.

இலக்கம்.	ச்ருதிகள்.	ச்ருதி ஜாதிகள்	ஷட்ஜக்ராம ஸ்வரங்கள்.	மத்யமக்ராம ஸ்வரங்கள்.	காந்தாரக்ராம ஸ்வரங்கள்.	சுத்த ஸ்வரங்கள்.	சுத்த ஸ்வரங்களிலடங்கிய ச்ருதிகள்.	விக்ருத ஸ்வரங்கள்.	விக்ருத ஸ்வரங்களிலடங்கிய ச்ருதிகள்.
1	தீவ்ரா	தீப்தா		.	நி	.	...	கைசிகநிஷாதம்	திரிச்ருதிகம்
2	குமுத்வதி	ஆயதா			.	.	...	காகலீநிஷாதம்	சதுச்ருதிகம்
3	மந்தா	மிருது	...				...	ச்யுதஷட்ஜம்	த்விச்ருதிகம்
4	சந்தோவதி	மத்யா	ஸ	ஸ	ஸ	ஷட்ஜம்	சதுச்ருதிகம்	அச்யுதஷட்ஜம்	த்விச்ருதிகம்
5	தயாவதி	கருணை	...		..		..	...	...
6	ரஞ்ஜனீ	மத்யா	..			.	..	...	...
7	ரதிகா	மிருது	ரி	ரி	ரி	ரிஷபம்	த்ரிச்ருதிகம்	விக்ருதர்ஷபம்	சதுச்ருதிகம்
8	ரௌத்ரீ	தீப்தா	..	...	..		..	...	...
9	க்ரோதா	ஆயதா	க	க		காந்தாரம்	த்விச்ருதிகம்	...	..
10	வஜ்ரிகா	தீப்தா	.		க	.	...	ஸாதாரணகாந்தாரம்	த்ரிச்ருதிகம்
11	ப்ரஸாரிணீ	ஆயதா	.	...	.	..	..	அந்தரகாந்தாரம்	சதுச்ருதிகம்
12	ப்ரீதி	மிருது	..	..	...		...	ச்யுதமத்யமம்	த்விச்ருதிகம்
13	மார்ஜனீ	மத்யா	ம	ம	ம	மத்யமம்	சதுச்ருதிகம்	அச்யுதமத்யமம்	த்விச்ருதிகம்
14	க்ஷிதி	மிருது		..			...	...	...
15	ரக்தா	மத்யா		...	..		...	...	...
16	ஸந்தீபினீ	ஆயதா		ப	ப		..	த்ரிச்ருதிபஞ்சமம்	த்ரிச்ருதிகம்
								கைசிகபஞ்சமம்	சதுச்ருதிகம்
17	ஆலாபினீ	கருணை	ப	...	...	பஞ்சமம்	சதுச்ருதிகம்	...	...
18	மதந்தீ	கருணை	...	...	.	.	...	...	...
19	ரோஹிணீ	ஆயதா	...	த	த	...	...	...	...
20	ரம்யா	மத்யா	த	.	..	தைவதம்	த்ரிச்ருதிகம்	விக்ருததைவதம்	சதுச்ருதிகம்
21	உக்ரா	தீப்தா	...	..	...	...	...	...	...
22	க்ஷோபிணீ	மத்யா	நி	நி	...	நிஷாதம்	த்விச்ருதிகம்	...	...

ஸ்வரங்கள்.—ஷட்ஜம், ரிஷபம் காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என ஏழுஸ்வரங்கள் இந்த ச்ருதிகளிலிருந்துண்டாகின்றன அவைகளில், மயில் ஷட்ஜத்வனியையும், ரிஷபம் ரிஷபத்வனியையும், ஆடு காந்தாரத்வனியையும், க்ரௌஞ்சபக்ஷி மத்யமத்வனியையும், கோகிலம் பஞ்சமத்வனியையும், குதிரை தைவதத்வனியையும், யானை நிஷாதத்வனியையும் உச்சரிக்கின்றன.

ஷட்ஜம்.—மூக்கு, கழுத்து, ஹிருதயம், தாடை, நாக்கு, பல் என்ற இந்த ஆறு இடங்களிலிருந்தும் பிறக்கிறபடியால் ஷட்ஜமென்று பெயர்.

ரிஷபம்.—ரிஷபத்தின் த்வனியைப்போலிருக்கிறது.

காந்தாரம்.—மந்தாதந்தி இந்த ஸ்வரத்தைப்பெற்றுக்கொண்டிருப்பதால இந்தப்பெயர் வந்தது. தம்புராவில் மந்தாதந்தியில் ஜீவாளத்தைவைத்து மீட்டிப்பார்த்தால் அதில் அந்தரகாந்தாரஸ்வரம் த்வனிக்கும்.

மத்யமம்.—ஸப்தஸ்வரங்களுக்கு மத்தியிலிருக்கின்றது.

பஞ்சமம்.—நாபி, மார்பு, ஹிருதயம், கண்டம், சிரஸ் என்ற ஐந்து இடங்களிலிருந்து உண்டாகின்றது.

தைவதம்.—நாபிமுதலிய ஸ்தானங்களைத்தழுவிக்கொண்டு வருகிறது.

நிஷாதம்.—ஷட்ஜம் முதல் ஆறு ஸ்வரங்களும் இதனிடத்தில் சேர்ந்திருக்கிறது.

ஸ்வரசக்ரம்.

ஸ்வரங்கள்.	ஷட்ஜம்.	ரிஷபம்.	காந்தாரம்.	மத்யமம்.	பஞ்சமம்.	தைவதம்.	நிஷாதம்.
* ஜாதி	ப்ராஹ்மண	க்ஷத்ரிய	வைச்ய	ப்ராஹ்மண	ப்ராஹ்மண	க்ஷத்ரிய	வைச்ய
வம்சம்	தேவ	ரிஷி	தேவ	தேவ	பிதிரு	ரிஷி	ராக்ஷஸ
அதிதேவதை	அக்நி	ப்ராஹ்மா	ஸரஸ்வதி	சிவன்	விஷ்ணு	விநாயகர்	ஸூர்யன்
த்வீபம்	ஜம்பூ	சாகம்	குசம்	க்ரௌஞ்சம	சால்மலீ —	ச்வேதம்	புஷ்கரம்
விருக்ஷம்	மா	ஈச்சை	வாழை	எலுமிச்சை	மாதுளை	த்ராக்ஷா	புன்னை
சந்தஸ்	அனுஷ்டுப்	காயத்ரீ	த்ரிஷ்டுப்	பிருஹதி	பங்தி	உஷ்ணிக்	ஜகதீ
போஜனம்	தத்யன்னம்	பாயஸம்	பக்ஷ்யங்களுடன் கூடின அன்னம்	சித்ரான்னம	மா	சுத்தான்னம்	அரிசி
வஸ்த்ரம்	வெள்ளை	பீதாம்பரம்	சிவப்பு	நீலம்	மஞ்சள்	சித்ரவர்ணம்	ச்யாமளம்
கந்தம்	குங்குமம்	அகில்	கஸ்தூரி	பச்சைக்கர்ப்பூரம்	கோரோசனை	சந்தனம்	கதம்பப்பொடி
புஷ்பம்	ஜாஜீ	சம்பகம்	புன்னை	மல்லிகை	மகிழ்	பாதிரி	தாமரை
அலங்காரம்	முத்து	நீலம்	வஜ்ரம்	வைடூர்யம்	மரகதம்	கோமேதகம்	புஷ்பராகம்
ஆயுதம்	கத்தி	பாகு	கதை	சக்ரம்	பிண்டிபாலம்	காராசம்	அங்குசம்
வாஹனம்	ஹம்ஸம்	ஸிம்ஹம்	கண்டபேரண்டம்	மான்	ஸாளுவம்	கிளி	...
பார்வை	கந்தர்வஸ்த்ரீ	கின்னரஸ்த்ரீ	யக்ஷஸ்த்ரீ	கிம்புருஷஸ்த்ரீ	நாகஸ்த்ரீ	தேவஸ்த்ரீ	ராக்ஷஸஸ்த்ரீ
ரூபம்	ஸ்தூலம்	ஸூக்ஷ்மம்	ஸ்தூலம்	செட்டை	ஸமம்	செட்டை	அதிஸ்தூலம்
ரஸம்	வீர, அத்புத, ரௌத்ர	வீர, அத்புத, ரௌத்ர	கருணை	ஹாஸ்ய, சிருங்கார	ஹாஸ்ய, சிருங்கார	பீபத்ஸ, பயானக	கருணை

* அந்தரஸ்வரமும் காகலீஸ்வரமும் சூத்ரஜாதிகள்.

ஸ்வரஸம்யோகங்கள்.

	1.	ஷட்ஜம்
ரிஷபம் ...	2.	சுத்தரிஷபம்
	3.	சதுச்ருதிரிஷபம்
	4.	ஷட்ச்ருதிரிஷபம்
காந்தாரம் ...	5.	சுத்தகாந்தாரம்
	6.	ஸாதாரணகாந்தாரம்
	7.	அந்தரகாந்தாரம்
மத்யமம் ...	8.	சுத்தமத்யமம்
	9.	ப்ரதிமத்யமம்
	10.	பஞ்சமம்
தைவதம் ...	11.	சுத்ததைவதம்
	12.	சதுச்ருதிதைவதம்
	13.	ஷட்ச்ருதிதைவதம்
நிஷாதம் ...	14.	சுத்தநிஷாதம்
	15.	கைசிகிநிஷாதம்
	16.	காகலீநிஷாதம்

சுத்தரிஷபம்.—ரிஷபம் மூன்றில் முதல் ரிஷபமாகையால் சுத்தரிஷபமெனப்பட்டது.

சுத்தகாந்தாரம்.—காந்தாரம் மூன்றில் முதல் காந்தாரமாகையால் சுத்தகாந்தாரமெனப்பட்டது.

சதுச்ருதிரிஷபம்.—ச்ருதிஸ்வரமாகிய ஷட்ஜச்ருதியிலிருந்து இது நான்காவதுச்ருதியாகையால் சதுச்ருதிரிஷபமெனப்பட்டது.

ஸாதாரணகாந்தாரம்.—ரிஷபத்தோடு இது ஸாதாரணமாய்க் கலக்கக்கூடியதாயிருப்பதால் ஸாதாரணகாந்தாரமெனப்பட்டது.

ஷட்ச்ருதிரிஷபம்.—ஷட்ஜச்ருதியிலிருந்து இது ஆறுவது ச்ருதியாகையால் ஷட்ச்ருதிரிஷபமெனப்பட்டது.

அந்தரகாந்தாரம்.—மற்ற இரண்டு காந்தாரங்களைப்போல் ரிஷபத்தோடு கலந்துநிற்காமல இது அந்தரமாய் நிற்பதால் அந்தரகாந்தாரமெனப்பட்டது.

சுத்தமத்யமம்.—மத்யமமிரண்டில் இது முதல்மத்யமமாகையால் சுத்தமத்யமமெனப்பட்டது.

ப்ரதிமத்யமம்.—சுத்தமத்யமத்துக்கு இது ப்ரதியாகையால் ப்ரதிமத்யமமெனப்பட்டது.

சுத்ததைவதம்.—தைவதம் மூன்றில் இது முதலாகையால் சுத்ததைவதமெனப்பட்டது.

சதுச்ருதிதைவதம்.—ச்ருதிஸ்வரமாகிய பஞ்சமச்ருதியிலிருந்து இது நான்காவது ச்ருதியாகையால் சதுச்ருதிதைவதமெனப்பட்டது.

ஷட்ச்ருதிதைவதம்.—பஞ்சமச்ருதியிலிருந்து இது ஆறுவது ச்ருதியாகையால் ஷட்ச்ருதிதைவதமெனப்பட்டது.

சுத்தநிஷாதம்.—நிஷாதமூன்றில் இது முதலாகையால் சுத்த நிஷாதமெனப்பட்டது.

கைசிகிநிஷாதம்.—தைவதத்திற்குக் கைசிகம் அல்லது உச்ச ஸ்தானமாகிய ஷட்ச்ருதிதைவதத்தில் ஒரு தங்கி நிற்பதால் கைசிகிநிஷாதமெனப்பட்டது.

காகலீநிஷாதம்.—நிஷாதம் மூன்றில் இது மிகவும் மதுரமாகையால் காகலிநிஷாதமெனப்பட்டது.

ஸ்வரஸ்தானங்கள்.—மேற்கண்ட பதினாறுஸ்வரங்கள் ஒரு ஸ்தாயியில் 12 ஸ்தானங்களில் அடங்கியிருக்கின்றன. அதைப்பின் வரும் வீணாசக்ரத்தில் பார்க்க.

வீணையின் முதல் தந்தியே ஷட்ஜமாகையால் அதற்கு ஸ்வரஸ்தானம் காட்டாமல் சுத்தரிஷபம் முதல் ஹெச்சஷட்ஜம்வரையிலுள்ள பதினாறுஸ்வரங்களின் பன்னிரண்டுஸ்தானங்கள் காட்டபபடுகின்றன.

	1	2	3	4	5	6	7	8	9	10	11	12
ஷ.	சு. ரி.	ச. ரி. சு. க.	ஷ. ரி சா. க.	அ. க.	சு. ம.	ப்ர. ம.	ப.	சு. த.	ச. த. சு. நி.	ஷ. த. கை. நி.	கா. நி.	ஷ.

நியதச்ருதிகள்.—ஷட்ஜத்திற்கு 4-வதும், ரிஷபத்திற்கு 7-வதும், காந்தாரத்திற்கு 9-வதும், மத்யமத்திற்கு 13-வதும், பஞ்சமத்திற்கு 17-வதும், தைவதத்திற்கு 20-வதும், நிஷாதத்திற்கு 22-வதும் நியதச்ருதிகள்.

ஸ்வரவிபாகம்.—நியதச்ருதிகளுடன் கூடின ஸ்வரங்கள் சுத்தமெனப்படும். அவைகளுக்கு ஹெச்சாயும் தக்காயுமிருக்கும் ச்ருதிகளுடன் கூடின ஸ்வரங்கள் விகிருதஸ்வரங்களெனப்படும். (படம் I பார்க்க.)

ஸ்வரஸஞ்சாரம்.—வாதி, விவாதி, ஸம்வாதி, அநுவாதி என நான்கு.

4016—30

வாதீஸ்வரங்கள்.—ராகத்தை இன்னதென்று நிசசயிக்கும்; ராகத்தை ஏற்படுத்துவதில் முக்யமாய் உபயோகப்படும்; ப்ரயோகத்தில் விஸ்தாரமாய் வழங்கும்.

ஸம்வாதீ.—ராகலக்ஷணம் வெளிப்பட்டபிறகு அதை நிர்வாஹம் செய்யும்.

அனுவாதீ.—முக்கியஸ்வரங்களுக்கு முந்தியாவது பிந்தியாவது இருக்கும்; ராகப்ரஸ்தாரத்திற்கு உபயோகமானவை.

விவாதீ.—செவிக்கு வெறுப்பாயிருக்கும்; ராகத்தின் மாதுர்யத்தைக் கெடுக்கும்.

வாதீ, ஸ்வரங்களுக்கு ராஜா; ஸம்வாதீ, மந்த்ரீ; அனுவாதீ, வேலைக்காரன்; விவாதீ, சத்ரு; எந்த இரண்டுஸ்வரங்களுக்கு நடுவில் பன்னிரண்டு அல்லது எட்டுச்ருதிகளிருக்கின்றனவோ அவை ஸம்வாதீஸ்வரங்கள்; மற்றவை அனுவாதிகள். காந்தாரமும் நிஷாதமும் மற்ற ஐந்துஸ்வரங்களுக்கும் விவாதிகள்.

லக்கம்.	ஸஞ்சாரபேதம்.	உதாஹரணம்.
1	வாதீ	ஸரிகமபதநிஸ, ரிகமபதநிஸ, கமபதநிஸ, மபதநிஸ, பதநிஸ, தநிஸ, நிஸ, ஸ.
2	ஸம்வாதீ	ஸநிதபமகரிஸ, நிதபமகரிஸ, தபமகரிஸ, பமகரிஸ, மகரிஸ, கரிஸ, ரிஸ, ஸ.
3	விவாதீ	ஸமகரிஸரிகம, ரிபமகரிகமப, கதபமகமபத, etc.
4	அனுவாதீ	ஸரிகா, ரிகமா, கமபா, மபதா, பதநீ, தநிஸா, ஸநிதா, நிதபா, தபமா, பமகா, மகரீ, கரிஸா.

ஸ்வரப்ரஸ்தாரம்.

லக்கம்.	பேதங்களின் பெயர்.	உதாஹரணம்.
1	ஸம்பூர்ணம் ...	ஸரிகமபதநி
2	ஷாடவம்	ஸரிகமபத
3	ஔடவம் ..	ஸரிகமப
4	ஸ்வராந்தம் ...	ஸரிகம
5	ஸாமிகம் ...	ஸரிக
6	காதிகம் ..	ஸரி
7	ஆர்ச்சிகம்	ஸ

ஸ்தாயீ.—ஷட்ஜபஞ்சமங்கள் அமைந்து பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்களுள்ளது ஒரு ஸ்தாயீயெனப்படும். அவை மந்த்ரம் (தக்கு), மத்யம் (மத்யம்), தாரம் (ஹெச்சு) என்று மூன்றுவகைப்படும். மந்த்ரஸ்தாயீ ஹ்ருதயத்திலிருந்தும், மத்யமஸ்தாயீ கண்டத்திலிருந்தும், தாரஸ்தாயீ சிரஸிலிருந்தும் பேசும். வழக்கமாய்ப் புருஷர்கள் பாடும் ச்ருதி பஞ்சமச்ருதியென்றும், ஸ்த்ரீகள் பாடும் ச்ருதி மத்யமச்ருதியென்றும் சொல்லப்படும். பஞ்சமச்ருதியில் பஞ்சமத்தைச் சுத்தமத்யமமாக வைத்துக்கொண்டால் அது மத்யமச்ருதியாகும்.

க்ராமம்.—ஸ்வரங்களுடைய சேர்க்கைக்கு க்ராமமென்று பெயர். அது, தானம், மூர்ச்சனை, ஜாதி, ஜாத்யம்சகம் முதலியவைகளுக்காதாரமாயிருக்கிறது. ஸ்வரங்களை க்ரமமாக மேலும் கீழுமாய்ப்பாடுவது மூர்ச்சனையென்று சொல்லப்படும். ஆரோஹணத்தில் மாத்ரம் ஸஞ்சாரமுள்ள மூர்ச்சனைகளுக்குத் தானங்களென்று பெயர். ஸம்பூர்ணம் அஸம்பூர்ணமென்ற எல்லா மூர்ச்சனைகளிலுமுள்ள ஸ்வரங்களை ப்ரஸ்தாரஞ்செய்யும்பொழுது அவைகளுக்குக் கூடதானங்களென்று பெயர்.

மூர்ச்சனைக்ரம்.

	லக்கம்.	மூர்ச்சனையின் பெயர்.	உதாஹரணம்.	
ஷட்ஜக்ராமம்.	1	உத்தரமந்த்ரா ...	ஸரிகமபதநிஸ,	ஸநிதபமகரிஸ.
	2	ரஜனீ ...	ரிகமபதநிஸரி,	ரிஸநிதபமகரி.
	3	உத்தராயதா ..	கமபதநிஸரிக,	கரிஸநிதபமக.
	4	சுத்தஷட்ஜா ..	மபதநிஸரிகம,	மகரிஸநிதபம.
	5	மத்ஸரிக்ருதா ..	பதநிஸரிகமப,	பமகரிஸநிதப.
	6	அச்வக்ராந்தா ...	தநிஸரிகமபத,	தபமகரிஸநித.
	7	அபிருத்கதா ...	நிஸரிகமபதநி,	நிதபமகரிஸநி.
மத்யமக்ராமம்.	8	ஸௌவீரீ ...	ஸரிகமபதநிஸ,	ஸநிதபமகரிஸ.
	9	ஹரிணாச்வா ...	ரிகமபதநிஸரி,	ரிஸநிதபமகரி.
	10	கலோபனதா ...	கமபதநிஸரிக,	கரிஸநிதபமக.
	11	சுத்தமத்யா ..	மபதநிஸரிகம,	மகரிஸநிதபம.
	12	மார்க்கீ ...	பதநிஸரிகமப,	பமகரிஸநிதப.
	13	பௌரவீ ...	தநிஸரிகமபத,	தபமகரிஸநித.
	14	ஹ்ருஷ்யகா ...	நிஸரிகமபதநி,	நிதபமரிகஸநி.
காந்தாரக்ராமம்.	15	நந்தா ...	ஸரிகமபதநிஸ,	ஸநிதபமகரிஸ.
	16	விசாலா ...	ரிகமபதநிஸரி,	ரிஸநிதபமகரி.
	17	ஸுமுகீ ...	கமபதநிஸரிக,	கரிஸநிதபமக.
	18	சித்ரா ...	மபதநிஸரிகம,	மகரிஸநிதபம.
	19	சித்ரவதீ ..	பதநிஸரிகமப,	பமகரிஸநிதப.
	20	ஸுகா ...	தநிஸரிகமபத,	தபமகரிஸநித.
	21	ஆலாபீ ...	நிஸரிகமபதநி,	நிதபமகரிஸநி.

முதல் ஏழுமூர்ச்சனைகளுக்கும் மந்த்ரஸ்தாயிஷட்ஜம் ஆரம்பமாகையால் அவைகளுக்கு ஷட்ஜக்ராம (நந்த்யாவர்த்த) மென்றும்; இரண்டாவது ஏழுமூர்ச்சனைகளும் மத்யஸ்தாயிஷட்ஜம் ஆரம்பமாகையால் மத்யக்ராம (ஜீமூத) மென்றும்; மூன்றாவது ஏழுமூர்ச்சனைகளுக்கும் தாரஸ்தாயிஷட்ஜம் ஆரம்பமாகையால் அவைகளுக்குக் கந்தாரக்ராம (ஸுபத்ர) மென்றபெயர். இவைகளில் மூன்றாவது ஏழுமூர்ச்சனைகள் தாரஸ்தாயிக்கு மேற்பட்ட ஆரோஹணாவரோஹணங்களையுடையவைகள். இந்தலோகத்தில் மூன்றுஸ்தாயிகளுக்குமேல் பாடுவது மனிதர்களுக்கு அஸாத்யமாகையால் மூன்றுஸ்தாயிவரையில் ஸம்பந்தப்பட்ட முதல் 14 மூர்ச்சனைகள் மாத்ரம் பூலோகத்திற்குரியவைகளென்றும், மற்ற 7ம் தேவலோகத்திற்குரியவைகளென்றும் சொல்லப்படும். இந்தப்பதினான்கில் ஒவ்வொன்றும் சுத்தமென்றும், காகலீயென்றும், ஸாந்தரமென்றும், த்வயோபேதமென்றும் நான்கு விதம்.

a. ஷட்ஜக்ராமத்தில் ஷாடவதானங்கள் 28 :—
ஷட்ஜவர்ஜம் 7; ரிஷபவர்ஜம் 7; பஞ்சமவர்ஜம் 7, நிஷாதவர்ஜம் 7.

b. மத்யமக்ராமத்தில் ஷாடவதானங்கள் 21 :—
ஷட்ஜவர்ஜம் 7; ரிஷபவர்ஜம் 7; காந்தாரவர்ஜம் 7.

c. ஷட்ஜக்ராமத்தில் ஔடுவதானங்கள் 21 :—
நிஷாதவர்ஜம் 7; காந்தாரவர்ஜம் 7; பஞ்சமரிஷபவர்ஜம் 7.

d. மத்யமக்ராமத்தில் ஔடுவதானங்கள் 14 :—
நிஷாதகாந்தாரவர்ஜம் 7; ரிஷபதைவதவர்ஜம் 7.

வர்ணங்கள்.—ஸ்தாயி, ஆரோஹி, அவரோஹி, ஸஞ்சாரி என நான்கு வகை.

ஸ்தாயி.—ஒரே ஸ்வரத்தை அநேகந்தடவை ஸமமான இடைவெளிகளுடன் பாடுவது....ஸ. ஸ. ஸ. ஸ.

ஆரோஹி.—ஸ்வரங்களைக்ரமமாய் மேலே பாடிக்கொண்டுபோவது... ஸ. ரி. க. ம. ப. த. நி.

அவரோஹி.—ஸ்வரங்களைக்ரமமாய் மேலிருந்து கீழ்வரிசையாய்ப்பாடுவது....நி. த. ப. ம. க. ரி. ஸ.

ஸஞ்சாரி.—இம்மூன்றும் கலந்தது ... ஸ. ஸ. ஸ. நி. ம. ம. நி. ம. ப. நி. ரி. ரி. ப. ப. நி. த.

இந்த வர்ணங்களை அனேகவிதமாய் ப்ரஸ்தாரம்செய்வது அலங்காரமெனப்படும்.

ஸ்தாயி 7, ஆரோஹி 12, அவரோஹி 12, ஸஞ்சாரி 25, மற்ற அலங்காரங்கள் 12, ஆக அலங்காரங்கள் 68 வகை.

ஜாதிகள்.—சுத்தம் 7 : ஷாட்ஜீ, ஆர்ஷபீ, காந்தாரீ, மத்யமா, பஞ்சமீ, தைவதீ, நைஷாதீ. 7 ஸ்வரங்களுடன் கூடினதாயும் ஜாதியினுடைய நாமஸ்வரமே அதற்கு ந்யாஸம், அபந்யாஸம், அம்சம், க்ரஹமாயும், தாரஸ்தாயியில் ந்யாஸஸ்வரமில்லாமலுமிருந்தால் அது சுத்தஜாதியெனப்படும். மேற்சொன்ன லக்ஷணங்களில் எது குறைந்தாலும் விக்ருதஜாதியெனப்படும்.

ஒரு கீதத்தின் ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்வரம் க்ரஹஸ்வரமென்று பெயர் ; கீதத்தை முடிக்கும் ஸ்வரம் ந்யாஸஸ்வரமென்று பெயர் ; ப்ரயோகத்தில் விஸ்தாரமாய் உபயோகப்படும் ஸ்வரம் அம்சஸ்வரமென்று பெயர்.

லக்கம்.	ஜாதி.	அம்சம்.	ந்யாஸம்.	அபந்யாஸம்.	மூர்ச்சனை.	ஷாடவத்வேஷி ஸ்வரங்கள்	ஔடுவத்வேஷி ஸ்வரங்கள்.
1	ஷாட்ஜீ	ஸகமபத	ஸ	கப	உத்தராயதா	நி	....
2	ஆர்ஷபீ	ரிதநி	ரி	ரிதநி	சுத்தஷட்ஜா	ஸ	ஸப
3	காந்தாரீ	ஸகமபநி	க	ஸப	பௌரவீ	ரி	ரித
4	மத்யமா	ஸரிமபத	ம	ஸரிமபத	கலோபநதா	க	கநி
5	பஞ்சமீ	ரிப	ப	ரிபநி	கலோபநதா	க	கநி
6	தைவதீ	ரித	த	ரிமத	அபிருத்கதா	ப	ஸப
7	நைஷாதீ	ஸகநி	நி	ஸகநி	அபிருத்கதா	ப	ஸப
8	ஷட்ஜகைசிகீ	ஸகப	க	ஸபநி	...	...	...
9	ஷட்ஜோதீச்யவா	ஸமதநி	ம	ஸத	அசவக்ராந்தா	ரி	ரித
10	ஷட்ஜமத்யமா	ஸரிகமபதநி	ஸம	ஸரிகமபதநி	மத்ஸரீகிருதா	நி	கநி
11	காந்தாரோதீச்யவா	ஸம	ம	ஸத	பௌரவீ	ரி	...
12	ரக்தகாந்தாரீ	ஸகமபநி	க	க	கலோபநதா	ரி	ரித
13	கைசிகீ	ஸகமபதநி	கபநி	ஸகமபதநி	ஹரிணாச்வா	ரி	ரித
14	மத்யமோதீச்யவா	ப	ம	ஸத	ஸௌவீரீ	...	...
15	கார்மாரவீ	ரிபதநி	ப	ரிபதநி	சுத்தமத்யா	....	...
16	காந்தாரபஞ்சமீ	ப	க	ரிப	ஹரிணாசவா	...	...
17	ஆந்த்ரீ	ரிகபநி	க	ரிகபநி	ஸௌவீரீ	ஸ	...
18	நந்தயந்தீ	ப	க	மப	ஹரிணாச்வா	ஸ	...

ராகம்.—ஸ்வரங்களாலும் வர்ணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு ஜனங்களுடைய மனஸுக்கு ஆனந்தத்தைக்கொடுக்கும்படியான த்வனியானது ராகமெனப்படும்.

ராகங்கள், மேளகர்த்தாராகங்கள் ஜன்யராகங்களென்றும்; ஸம்பூர்ணராகங்கள் ஷாடவராகங்கள் ஔடவராகங்கள் என்றும்; சுத்தராகங்கள் வக்ரராகங்களென்றும்; சுத்தராகங்கள் சாயாலக ராகங்கள் ஸங்கீர்ணராகங்களென்றும்; மித்ரராகங்கள் சத்ரு ராகங்களென்றும்; புருஷராகம், ஸ்த்ரீராகம், நபும்ஸகராகம், புத்ரராகம்; ராகாங்கராகம், பாஷாங்கராகம், க்ரியாங்கராகம், உபாங்கராகங்களென்றும் ஏழு வகைப்படும்.

1. **மேளகர்த்தா.**—ஆரோஹண அவரோஹணங்கள் சுத்தஸம்பூர்ணமாயுள்ள ராகங்கள்.

ஜன்யம்.—மேளகர்த்தா அல்லாத மற்ற ராகங்கள்.

2. **ஸம்பூர்ணம்.**—ஏழு ஸ்வரங்களுமுள்ள ராகங்கள்.

ஷாடவம்.—ஆறு ஸ்வரங்களுள்ள ராகங்கள்.

ஔடவம்.—ஐந்து ஸ்வரங்களுள்ள ராகங்கள்.

3. **சுத்தம்.**—ஸ்வரங்கள முன்பின்னாகவிராமல் க்ரமமாயிருக்கும் ராகங்கள்.

வக்ரம்.—ஸ்வரங்கள் முன்பின்னாகவிருக்கும் ராகங்கள.

4. **சுத்தம்.**—ஸங்கீத சாஸ்த்ர விதிப்படி அமைக்கப்பட்ட ராகங்கள்.

சாயாலகம்.—மற்ற ராகங்களுடைய சாயையையுடைத்தாயிருக்கும் ராகங்கள்.

ஸங்கீர்ணம்.—மேற்சொன்ன இரண்டுலக்ஷணங்களுமுள்ள ராகங்கள்.

5. **மித்ரம்.**—ஒரு ராகத்தைப்பாடினவுடனே எந்த ராகத்தைப்பாடினால் சோபிக்குமோ அது மித்ரராகம்; **சத்ரு.**—எது வெறுப்பாயிருக்குமோ அது சத்ருராகம்.

ராகம்.	ஆரோஹணம்.	அவரோஹணம்.	வகை.	
ஷண்முகப்ரியா	ஸரிகமபதநிஸ	ஸநிதபமகரிஸ	மேளகர்த்தா	1
ஸாவேரீ	ஸரிமபதஸ	ஸநிதபமகரிஸ	ஜன்யம்	
சங்கராபரணம்	ஸரிகமபதநிஸ	ஸநிதபமகரிஸ	ஸம்பூர்ணம்	
ஸ்ரீரஞ்சநீ	ஸரிகமதநிஸ	ஸநிதமகரிஸ	ஷாடவம்	2
மோஹனம்	ஸரிகபதஸ	ஸதபகரிஸ	ஔடவம்	
சுத்தஸாவேரீ	ஸரிமபதஸ	ஸதபமரிஸ	சுத்தம்	3
மாளவீ	ஸரிகமபமதநிஸ	ஸநிதநிபமகமரிஸ	வக்ரம்	
ஹம்ஸத்வனி	ஸரிகபநிஸ	ஸநிபகரிஸ	சுத்தம்	
நவரோஜு	பதநிஸரிகமப	பமகரிஸநிதப	சாயாலகம்	4
பேஹாக்	ஸகமபநிஸ	ஸநிதபமகரிஸ	ஸங்கீர்ணம்	
காட	ஸரிகமபதநிஸ	ஸநிபமரிஸ	மித்ர	
கௌள	ஸரிமபநிஸ	ஸநிபமரிகமரிஸ	மித்ர	5
தோடி	ஸரிகமதநிஸ	ஸநிதமகரிஸ	மித்ர	
கல்யாணீ	ஸரிகமபதநிஸ	ஸநிதபமபகரிஸ	சத்ரு	
ஸ்ரீராக			புருஷ	
பல்லாதி			ஸ்த்ரீ	6
தேசி			அலி	
மாருவ			புத்ர	

மேளகர்த்தாராகங்கள்.

சுத்தமத்யமசக்ரங்கள்.

———	ஸ	ரி	க	ம	ப	த	நி
சக்ரம் 1.							
1. கனகாங்கி ...	,,	சு	சு	சு	,,	சு	சு
2. ரத்னாங்கி ...	,,	சு	சு	சு	,,	சு	கை
3. கானமூர்த்தி ...	,,	சு	சு	சு	,,	சு	கா
4. வனஸ்பதி ...	,,	சு	சு	சு	,,	ச	கை
5. மானவதி ...	,,	சு	சு	சு	,,	ச	கா
6. தானரூபி ...	,,	சு	சு	சு	,,	ஷ	கா
சக்ரம் 2.							
7. ஸேனாவதி ...	,,	சு	சா	சு	,,	சு	சு
8. ஹனுமத்தோடி ...	,,	சு	சா	சு	,,	சு	கை
9. தேனுக ...	,,	சு	சா	சு	,,	சு	கா
10. நாடகப்ரியா ...	,,	சு	சா	சு	,,	ச	கை
11. கோகிலப்ரியா ..	,,	சு	சா	சு	,,	ச	கா
12. ரூபாவதி ...	,,	சு	சா	சு	,,	ஷ	கா
சக்ரம் 3.							
13. காயகப்ரியா ...	,,	சு	அ	சு	,,	சு	சு
14. வகுளாபரணம் ...	,,	சு	அ	சு	,,	சு	கை
15. மாயாமாளவகௌள ..	,,	சு	அ	சு	,,	சு	கா
16. சக்ரவாகம் ...	,,	சு	அ	சு	,,	ச	கை
17. ஸூர்யகாந்தம் ...	,,	சு	அ	சு	,,	ச	கா
18. ஹாடகாம்பரி ...	,,	சு	அ	சு	,,	ஷ	கா
சக்ரம் 4.							
19. ஜங்காரத்வனி ...	,,	ச	சா	சு	,,	சு	சு
20. நடபைரவி ...	,,	ச	சா	சு	,,	சு	கை
21. கீரவாணி ...	,,	ச	சா	சு	,,	சு	கா
22. கரஹரப்ரியா ...	,,	ச	சா	சு	,,	ச	கை
23. கௌரீமனோஹரி ...	,,	ச	சா	சு	,,	ச	கா
24. வருணப்ரியா ...	,,	ச	சா	சு	,,	ஷ	கா
சக்ரம் 5.							
25. மாரரஞ்சனி ...	,,	ச	அ	சு	,,	சு	சு
26. சாருகேசி ...	,,	ச	அ	சு	,,	சு	கை
27. ஸரஸாங்கி ...	,,	ச	அ	சு	,,	சு	கா
28. ஹரிகாம்போஜி ...	,,	ச	அ	சு	,,	ச	கை
29. தீரசங்கராபரணம் ...	,,	ச	அ	சு	,,	ச	கா
30. நாகானந்தி ...	,,	ச	அ	சு	,,	ஷ	கா
சக்ரம் 6.							
31. யாகப்ரியா ...	,,	ஷ	அ	சு	,,	சு	சு
32. ராகவர்தனி ...	,,	ஷ	அ	சு	,,	சு	கை
33. காங்கேயபூஷணி ...	,,	ஷ	அ	சு	,,	சு	கா
34. வாகதீச்வரி ...	,,	ஷ	அ	சு	,,	ச	கை
35. சூலினி ...	,,	ஷ	அ	சு	,,	ச	கா
36. சலநாட ...	,,	ஷ	அ	சு	,,	ஷ	கா

ப்ரதிமத்யம சக்ரங்கள்.

		ஸ	ரி	க	ம	ப	த	நி
	சக்ரம் 7.							
37.	ஸாலகம் ...	,,	சு	சு	ப்ர	,,	சு	சு
38	ஜலார்ணவம	,,	சு	சு	ப்ர	,,	சு	கை
39.	ஜாலவராளி ...	,,	சு	சு	ப்ர	,,	சு	கா
40.	நவநீதம்	,,	சு	சு	ப்ர	,,	ச	கை
41.	பாவனி ..	,,	சு	சு	ப்ர	,,	ச	கா
42.	ரகுப்ரியா	,,	சு	சு	ப்ர	,,	ஷ	கா
	சக்ரம் 8.							
43.	கவாம்போதி ..	,,	சு	சா	ப்ர	,,	சு	சு
44.	பவப்ரியா	,,	சு	சா	ப்ர	,,	சு	கை
45.	சுபபந்துவராளி .	,,	சு	சா	ப்ர	,,	சு	கா
46.	ஷட்விதமார்கிணி .	,,	சு	சா	ப்ர	,,	ச	கை
47	ஸுவர்ணாங்கி ..	,,	சு	சா	ப்ர	,,	ச	கா
48	திவ்யமணி .	,,	சு	சா	ப்ர	,,	ஷ	கா
	சக்ரம் 9							
49.	தவளாம்பரி	,,	சு	அ	ப்ர	,,	சு	சு
50.	நாமநாராயணி	,,	சு	அ	ப்ர	,,	சு	கை
51	காமவர்தனி	,,	சு	அ	ப்ர	,,	சு	கா
52.	ராமப்ரியா	,,	சு	அ	ப்ர	,,	ச	கை
53.	கமனப்ரியா ..	,,	சு	அ	ப்ர	,,	ச	கா
54	விச்வம்பரி	,,	சு	அ	ப்ர	,,	ஷ	கா
	சக்ரம் 10.							
55.	ச்யாமளாங்கி	,,	ச	சா	ப்ர	,,	சு	சு
56	ஷண்முகப்ரியா .	,,	ச	சா	ப்ர	,,	சு	கை
57.	ஸிம்ஹேந்த்ரமத்யமம் ..	,,	ச	சா	ப்ர	,,	சு	கா
58.	ஹேமவதி ...	,,	ச	சா	ப்ர	,,	ச	கை
59.	தர்மவதி ..	,,	ச	சா	ப்ர	,,	ச	கா
60.	நீதிமதி .	,,	ச	சா	ப்ர	,,	ஷ	கா
	சக்ரம் 11.							
61.	காந்தாமணி ...	,,	ச	அ	சு	,,	சு	சு
62.	ரிஷபப்ரியா ...	,,	ச	அ	சு	,,	சு	கை
63.	லதாங்கி	,,	ச	அ	சு	,,	சு	கா
64.	வாசஸ்பதி ...	,,	ச	அ	சு	,,	ச	கை
65.	மேசகல்யாணி ...	,,	ச	அ	சு	,,	ச	கா
66.	சித்ராம்பரி ...	,,	ச	அ	சு	,,	ஷ	கா
	சக்ரம் 12.							
67.	ஸுசரித்ர ...	,,	ஷ	அ	சு	,,	சு	சு
68.	ஜ்யோதிஸ்வரூபிணி ..	,,	ஷ	அ	சு	,,	சு	கை
69.	தாதுவர்தனி ...	,,	ஷ	அ	சு	,,	சு	கா
70.	நாஸிகாபூஷணி ..	,,	ஷ	அ	சு	,,	ச	கை
71.	கோஸலம ...	,,	ஷ	அ	சு	,,	ச	கா
72.	ரஸிகப்ரியா ...	,,	ஷ	அ	சு	,,	ஷ	கா

மேளகர்த்தா அகராதி.

லக்கம்.	—	கர்த்தா லக்கம்.	லக்கம்.	—	கர்த்தா லக்கம்.
1	ஹரிகாம்போதி ...	28	37	ஜ்யோதிஸ்வரூபிணி .	68
2	ஹநுமத்தோடி .	8	38	தர்மவதி ...	59
3	ஹாடகாம்பரி ...	18	39	தவளாம்பரி ...	49
4	ஹேமவதி	58	40	தாதுவர்தனி ...	69
5	கமனப்ரியா ..	53	41	தானரூபி ...	6
6	கரஹரப்ரியா ...	22	42	திவ்யமணி ..	48
7	கவாம்போதி	43	43	தீரசங்கராபரணம்	29
8	கனகாங்கி .	1	44	தேனுக .	9
9	காங்கேயபூஷணி ...	33	45	நடபைரவி ...	20
10	காந்தாமணி ..	61	46	நவநீதம் .	40
11	காமவர்தனி ..	51	47	நாகானந்தி	30
12	காயகப்ரியா .	13	48	நாஸிகாபூஷணி	70
13	கானமூர்த்தி	3	49	நாடகப்ரியா	10
14	கீரவாணி ...	21	50	நாமநாராயணி	50
15	கோகிலப்ரியா .	11	51	நீதிமதி ...	60
16	கோஸலம் ..	71	52	பவப்ரியா	44
17	கௌரிமனோஹரி	23	53	பாவனி ..	41
18	சக்ரவாகம்	16	54	மாயாமாளவகௌள ..	15
19	ஸரஸாங்கி .	27	55	மாரரஞ்சனி ..	25
20	சலநாட	36	56	மானவதி	5
21	ஜங்காரத்வனி	19	57	மேசகல்யாணி .	65
22	ஜலார்ணவம் .	38	58	யாகப்ரியா .	31
23	ஷட்விதமார்கிணி	46	59	ரகுப்ரியா	42
24	ஷண்முகப்ரியா ..	56	60	ரஸிகப்ரியா .	72
25	சாருகேசி	26	61	ரத்னாங்கி ...	2
26	ஸாலகம்	37	62	ராகவர்தனி	32
27	ஜலவராளி ..	39	63	ராமப்ரியா ..	52
28	சித்ராம்பரி	66	64	ரிஷபப்ரியா ...	62
29	ஸிம்ஹேந்த்ரமத்யமம் .	57	65	ரூபாவதி	12
30	சுசரித்ர .	67	66	லதாங்கி ...	63
31	சுபபந்துவராளி	45	67	வகுளாபரணம் .	14
32	ஸுவர்ணாங்கி . .	47	68	வருணப்ரியா ..	24
33	ஸூர்யகாந்தம் ...	17	69	வனஸ்பதி ..	4
34	சூலினி .	35	70	வாகதீஸ்வரி .	34
35	ஸேனாவதி	7	71	வாசஸ்பதி	64
36	ச்யாமளாங்கி	55	72	விச்வம்பரி ...	54

மேளகர்த்தாசக்ரம்.

							ரிஷபம்	காந்தாரம்
	1 37	2 38	3 39	4 40	5 41	6 42	சு	சு
	7 43	8 44	9 45	10 46	11 47	12 48	சு	சா
	13 49	14 50	15 51	16 52	17 53	18 54	சு	அ
	19 55	20 56	21 57	22 58	23 59	24 60	ச	சா
	25 61	26 62	27 63	28 64	29 65	30 66	ச	அ
	31 67	32 68	33 69	34 70	35 71	36 72	ஷ	அ
தைவதம்	சு	சு	சு	ச	ச	ஷ		
நிஷாதம்	சு	கை	கா	கை	கா	கா		

எந்த மேளகர்த்தாவின் சுத்தவிகிருதஸ்வரங்களின் விவரந் தெரியவேண்டுமோ, அந்தமேளகர்த்தாவின் லக்கத்தை மேலெழுதியிருக்கும் சக்ரத்திற்கண்டு, அதற்கு நேர் வலதுபுறமிருக்கும் கடைசி இரண்டு வீடுகளால் இன்னின்ன ரிஷபகாந்தாரங்களென்றும், ஷை லக்கத்திற்கு நேர்கீழேயிருக்கும் கடைசி இரண்டு வீடுகளால் இன்னின்ன தைவதநிஷாதங்களென்றும், ஷை லக்கமானது 36-க்கு மேற்படாததாயிருந்தால் சுத்தமத்யமமென்றும், அது 36-க்கு மேற்பட்டதாயிருந்தால் ப்ரதிமத்யமமென்றும் அறியவும். ஷட்ஜபஞ்சமங்கள் எல்லா மேளகர்த்தாக்களுக்கும் பொதுவானதால் அந்த ஸ்வரங்களை இந்தச்சக்ரத்தில் அமைத்தல் அனுவச்யமாயிற்று.

எழுபத்திரண்டு மேளகர்த்தாக்களுக்குக் காரணம்.—எலலா மேளகர்த்தாக்களிலும் ஆரோஹணவரோஹணங்கள் சுத்தஸம்பூர்ணக்

களாகவேயிருந்து, சுத்தவிக்ருதிகள்மட்டும் வித்யாஸப்பட்டு நிற்கும் ராகங்களாகிய மேளங்கள் மற்ற ஜன்யராகங்களுக்குக் கர்த்தாவாய் நிற்பதால், இவைகளுக்கு மேளகர்த்தாவென்றும், மேளம் என்றும், தாய்ராகமென்றும் சொல்வார்கள். சுத்தவிக்ருதியென்றால் அந்தந்த ராகத்துக்குரிய ரி. க. ம. த. நி. ஸ்வரங்களின் உட்பிரிவுகள்.

முன்னே சொல்லியிருக்கிறபடி ரிஷபத்தில் மூன்றுபேதங்களும் காந்தாரத்தில் மூன்றுபேதங்களுமிருப்பதில், அவை ஸம்யோகப்பட்டு வரும்போது:

1. சுத்த ரிஷபமும் சுத்த காந்தாரமும்
2. சுத்த ரிஷபமும் சாதாரண காந்தாரமும்
3. சுத்த ரிஷபமும் அந்தரகாந்தாரமும்
4. சதுச்ருதி ரிஷபமும் சாதாரண காந்தாரமும்
5. சதுச்ருதி ரிஷபமும் அந்தரகாந்தாரமும்
6. ஷட்ச்ருதி ரிஷபமும் அந்தரகாந்தாரமும்

என்ற ஆறு பேதங்கள் உண்டாகின்றன. இதே மாதிரியாக தைவத நிஷாதங்களின் ஸம்யோகத்தால்,

1. சுத்த தைவதமும் சுத்த நிஷாதமும்
2. சுத்த தைவதமும் கைசிக நிஷாதமும்
3. சுத்த தைவதமும் காகலீ நிஷாதமும்
4. சதுச்ருதி தைவதமும் கைசிக நிஷாதமும்
5. சதுச்ருதி தைவதமும் காகலீ நிஷாதமும்
6. ஷட்ச்ருதி தைவதமும் காகலீ நிஷாதமும்

என்ற ஆறுபேதங்கள் உண்டாகின்றன.

ரிஷபகாந்தாரதைவதநிஷாதங்களின் ஸம்யோகத்தால் 6×6=36 பேதங்களுண்டாகின்றன. மத்யமத்தில் சுத்தமத்யமமென்றும் ப்ரதிமத்யமமென்றும் இரண்டுபேதங்களிருப்பதால், பேதமில்லாத ஷட்ஜபஞ்சமங்களோடு கூடிய ஸப்தஸ்வரங்களின் ஸம்யோகத்தால் 36×2=72 பேதங்களுண்டாகின்றன.